Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 கதிர் : 102 | செவ்வாய்க்கிழமை 08 மார்ச் 2022 | மாசி 24 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 | விலை: 30/=

முச்சந்தி முரளி



"அப்ப இனி உவர் விமலுக்கு தொட்டதெல்லாம் மண்ணாகப் போகுதெண்டு சொல்லுங்கோ!..."



## தெற்காசியாவின் மிகப்பெரிய சிமெந்துத் தொழிற்சாலை திறப்பு

### விரைவில் உள்ளூர்த் தேவைகள் முழுமையாகப் பூர்த்தியடையுமாம்

அம்பாந்தோட்டை, மார்ச் 8

அம்பாந்தோட்டை மாவட்டத்தின் மாகம்புர லங்கா கைத்தொழில் வலயத்தில் நிர்மாணிக்கப்பட்ட இலங்கையில் 13

## நகை, பணம் புத்தூரில் திருட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 8

புத்தூர், நவக்கிரி பகுதியிலுள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் இரவு 15

## கல்வித்தகைமை என்ன? 20% எம்.பிக்கள் நழுவல்

கொழும்பு, மார்ச் 8

நாடாளுமன்ற உறுப்பினர்களின் அடிப்படை தரவுகளை சேகரிக்கவும், அவர்களின் கல்வித்தகைமைகள் உள்ளடங்கலாக அவர்களின் தனிப்பட்ட கோப்புகளை பராமரிக்கவும் ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும் கல்வித் தகைமைகள் குறித்து 15

## வீதி விளக்குகளை அணையுங்கள்

*பஸில் கோரிக்கை*

கொழும்பு, மார்ச் 8

இன்று முதல் மார்ச் 31 ஆம் திகதி வரை அனைத்து வீதி விளக்குகளையும் 15

## விமலின் வழக்கு: திகதி குறிப்பு

கொழும்பு, மார்ச் 8

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கைக்கு பயணம் 15

## நாணயமாற்று வீதத்தில் அதிரடியாக மாற்றம்

கொழும்பு, மார்ச் 8

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி 15

### வெள்ளம் தலைக்கேறிவிட்டது

# 'ஒற்றுமை ஒன்றியம்' ஒன்றை தமிழருக்காக உருவாக்குவோம்!

## விக்னேஸ்வரன் தமிழ்க் கட்சிகளிடம் உருக்கமான கோரிக்கை முன்வைப்பு

**யாழ்ப்பாணம், மார்ச் 8**

**இன்று வெள்ளம் தலைக்கேறிவிட்டது. ஒற்றுமையின்றேல் அனைவர்க்குந் தாழ்வே என்ற கட்டத்தை நாம் அனைவரும் அடைந்துள்ளோம். தமிழரின் விடியலுக்காக திறந்த மனதுடன் கலந்துறவாடி ஓர் ஒற்றுமை ஒன்றியத்தை உருவாக்குவது அவசியம்.** 15

## விடுவித்த காணிகளை மீளப்பிடுங்கும் அரசு

கீரிமலை ஜனாதிபதி மாளிகை அபிவிருத்திக்காகவாம்

பாதிக்கப்படுவோரை ஒன்றுகூடுமாறு வலி.வடக்கு தவிசாளர் அழைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 8

நல்லாட்சி அரசின் காலத்தில் மக்களிடம் ஒப்படைப்பதாகத் தெரிவிக்கப்பட்டு 11

## பெரும் சனத்திரள் புடைசூழ பியூஸ்லஸின் உடல் அடக்கம்

### துக்கநாளும் கடைப்பிடிப்பு

மன்னார், மார்ச் 8

மாலைதீவில் கடந்த மாதம் 26 திகதி உயிரிழந்த இலங்கை தேசிய அணியின் உதைபந்தாட்ட வீரர் டக்சன் பியூஸ்லஸின் பூதவுடல் நேற்று திங்கட்கிழமை மாலை 5 மணியள 13



## நாங்கள் நட்டநடுத்தெருவில் ஆட்சியாளர்களோ ஹெலியில்!

கொந்தளிக்கும் சிங்கள மக்கள் 15

### எதிரணி அலுவலகம் மீது

## பெரமுன குண்டர்கள் முட்டைத் தாக்குதல்

கொழும்பு கோட்டையில் நேற்றுப் பரபரப்பு

பொதுஜன பெரமுன நாடாளுமன்ற உறுப்பினர் மதுர விதானகேயுடன் சென்ற குழுவினர், 15

## மகளிர் தொழில்நுட்ப மையம் யாழ்ப்பாணத்தில் விரைவில்!

தமிழ் அரசுக் கட்சி மகளிர் விழாவில் இந்தியத் தூதரக அரசியல் ஆலோசகர் தகவல்

கிளிநொச்சி, மார்ச் 8

அறிவியலில் ஆர்வம் உள்ள பெண்களுக்காக தகவல் தொழில்நுட்ப 11

*மருந்துத் தட்டுப்பாடு*

## சோமாலியாவை விட இலங்கை மோசம்

15

## விஸ்வரூபமெடுக்கும் எரிவாயுத் தட்டுப்பாடு

60 வீதமான உணவகங்கள்

15

## உச்சத்தைத் தொட்டது மசகு எண்ணெய் விலை

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## ஒரு வாரத்தில் மட்டும் 35 பேருக்கு கொரோனா

மன்னார், மார்ச் 8
மன்னார் மாவட்டத்தில் மார்ச் மாதத்தில் இது வரை 35 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.
அதற்கமைவாக மாவட்டத்தில் 3 ஆயிரத்து 979 பேருக்கு இதுவரை தொற்று உறுதிப்படுத் தப்பட்டுள்ளது என்று மன்னார் பிராந்திய சுகா தார சேவைகள் பணிப்பாளர் பணிமனை தெரி வித்துள்ளது. இந்த வருடத்தில் இதுவரைக்கும் 797 பேரும் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட் டுள்ளது. (ம-4-60)

# பரபரப்புக்கு மத்தியில் இன்று கூடுகிறது சபை

## முன்வரிசை ஆசனத்தை இழந்தார் விமல்



கொழும்பு, மார்ச் 8
அவசர அமைச்சரவை மறுசீரமைப்பு மேற்கொள்ளப்பட்ட பின்னர், நாடாளு மன்றம் இன்று முற்பகல் 10 மணிக்கு சபா நாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலை மையில் கூடவுள்ளது.

தேசிய சுதந்திர முன்ன ணியின் தலைவர் விமல் வீரவன்ஸ, உதய கம்மன் பில ஆகியோர் அமைச் சரவையில் இருந்து நீக்கப்பட்டுள்ளதால், ஆளுங்கட்சி வரிசையில் அவர்களின் ஆசன ஒதுக் கீட்டிலும் மாற்றம் இடம் பெற்றுள்ளது. ஆளுங்கட்சிப் பக்கத்தில் முன்வரிசையில் அமர்ந்து வந்த விமல் வீரவன் ஸவுக்கு பின்வரிசையில் 73ஆவது ஆசனம் ஒதுக் கப்பட்டுள்ளது. 2010ஆம் ஆண்டு முதல் 2015 வரை ஆளுங்கட்சி வரி சையில் விமலுக்கு முன் வரிசையிலேயே இடம் ஒதுக்கப்பட்டது. எதிர்க்கட்சி வரிசையிலும் விமலுக்கு முன்வரிசை ஆசனமே வழங்கப் பட்டது. சுமார் 11 ஆண்டுகளுக் குப் பின்னர் முன்வரிசை அந்தஸ்தை அவர் இழந் துள்ளார். ஆளுங்கட்சியில் இரண் டாவது வரிசையில் அமர்ந்துவந்த உதய கம் மன்பில, நான்காவது வரிசைக்கு மாற்றப்பட் டுள்ளார்.
நாடாளுமன்றத்தில் அரச பக்கம் அமர்ந்தாலும் நாடாளுமன்றத்தில் சுயா தீனமாகவே செயற்படு வோம் என்று விமல், கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார ஆகியோர் அறிவித்துள்ளமை குறிப் பிடத்தக்கது. (ம-4-44)

## ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவர் கைது



யாழ்ப்பாணம், மார்ச் 8
போதைப் பொருளை உடைமையில் வைத் திருந்த குற்றச்சாட்டில் யாழ்ப்பாணம், பொம் மைவெளியில் சகோதர னும், சகோதரியும் கைது செய்யப்பட்டுள்ளனர்.
பொலிஸ் போதைப் பொருள் பிரிவினரா லேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.
அராலி வீதியில் இரு வர் மோட்டார் சைக் கிளில் ஹெரோயின் போதைப் பொருளுடன் பயணிக்கின்றனர் என்று பொலிஸ் போதைப் பொருள் பிரிவினருக் குக் கிடைத்த தகவலை யடுத்து, பொலிஸார் அந்தப்பகுதியில் விசேட சோதனை நடவடிக்கை களை மேற்கொண்டனர். வீதியில் மோட்டார் சைக் கிளில் பயணித்த 21 வயது இளைஞன் ஒரு வரைச் சோதனையிட்ட போது, அவரிடமிருந்து 5 கிராம் 470 மில்லி கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டது.
அதே மோட்டார் சைக் கிளில் பயணித்த 19 வயதான யுவதியிடம் இருந்தும் 189 கிராம் 500 மில்லிகிராம் ஹெரோயின் கைப்பற் றப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத் தப்பட்ட இருவரும் விசார ணைக்கு உட்படுத்தப்பட் டபோது, அவர்கள் இருவ ரும் சகோதரர்கள் என்று தெரியவந்துள்ளது.
இவர்களின் தந்தையும் ஹெரோயின் உடைமை யில் வைத்திருந்த குற்றச் சாட்டில் கைது செய்யப் பட்டு விசாரணைக்கு உட் படுத்தப்பட்டவர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-125)

## உண்மையைக் கூறினேன் பதவியைப் பறித்துவிட்டனர்

### விமல் ஆதங்கம்



நான் அமைச்சரவையி லிருந்து நீக்காகவே குரல் கொடுத்தேன். நாட்டின் நலன் கருதி உண்மைகளைப் பகி ரங்கமாக உரைத்தபடி யால் எனது அமைச் சுப் பதவியை ஜனாதி பதி பறித்துள்ளார். எனி னும், நீதி வெல்லும். உண்மை ஒருபோதும் சாகாது என்று தேசிய சுதந்திர முன்னணி யின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித் தார்.
அவர் மேலும் தெரிவித் ததாவது:
நான் உள்ளிட்ட எனது கட்சியைச் சேர்ந்த 6 உறுப்பினர்களும் நாடாளுமன்றத்தில் எதிரணிப் பக்கம் அமர மாட்டோம். அரச பக்கம் இருந்தே சுயாதீனமா கச் செயற்படுவோம். எனக்கு நடந்த அநீ திக்கு நீதி கிடைத்தே தீரும். எனது அமைச் சுப் பதவி பறிபோக நிதி அமைச்சர் பஸில் ராஜபக்சவே முழுக் காரணம். அதற்கான விளைவுகளை அர சியல் ரீதியில் அவர் விரைவில் சந்தித்தே தீருவார். நாட்டின் பொருளாதாரம் அத லபாதாளத்துக்குள் சென்றமைக்கும் பஸில் ராஜபக்ச பதில் சொல்லியே ஆக வேண்டும் -என்றார். (ம-4-22)

## பெண்ணுக்கு விளக்கமறியல்

மருத்துவபீட மாணவி எனப் பொய்யாக அடையாள அட் டையைத் தயாரித்து, திரு நெல்வேலிப் பகுதியில் தங்கி யிருந்த பெண் விளக்கமறிய லில் வைக்கப்பட்டுள்ளார்.
குறித்த பெண்ணுக்கு வீட்டை வாடகைக்கு வழங்கிய உரி மையாளர், அவரது நடவ டிக்கை தொடர்பில் சந்தேகம் கொண்டு கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார். முறைப்பாட் டின் பிரகாரம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு பெண் கைது செய்யப்பட்டிருந்தார்.
அவரை 14 நாள்கள் விளக்க மறியலில் வைக்க யாழ்ப் பாணம் நீதிவான் நீதிமன்ற பதில் நீதிவான் சரோஜினி இளங்கோவன் உத்தரவிட் டார். (ம-4-23)

# குடமுருட்டி குளத்தின்கீழ் 356 ஏக்கரில் சிறுபோகம்!



கிளிநொச்சி, குடமுருட் டிக் குளத்தின்கீழ் 356 ஏக்கரில் சிறுபோக நெற் செய்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.
அதேவேளை, குடமுருட் டிக் குளத்தை முழுமையா கச் சீரமைக்க வேண்டும் என்று விவசாயிகளால் கோரிக்கை விடுக்கப்பட் டுள்ளது. குடமுருட்டிக் குளம், கரியாலைநாக படுவான்குளம் ஆகியன 2010ஆம் ஆண்டுக்குப் பின்னர் முழுமையாகச் சீரமைப்புச் செய்யப் படவில்லை. அதனால் பயிர்ச்செய்கைக் காலங் களில் விவசாயிகள் பல நெருக்கடிகளை எதிர் கொண்டுள்ளனர்.
அதேவேளை, சிறுபோக நெற்செய்கைக் கூட்டத் தில் கருத்துத் தெரிவித்த நீர்ப்பாசனத் திணைக் கள அதிகாரிகள், குளங் களைச் சீரமைப்பதற் கான திட்டங்கள் நீர்ப்பா சனத் திணைக்களத்தால் கையளிக்கப்பட்டுள்ள போதும், நிதி கிடைக்கா ததால் பெரியளவிலான சீரமைப்பு வேலைகளை முன்னெடுக்க முடியா துள்ளது என்று தெரிவித் தனர். (எ-13)

## கிராமங்களில் தடுப்பூசி ஏற்றல்

சாவகச்சேரி, மார்ச் 8
தென்மராட்சிப் பிரதேசத்தில் இதுவரை பைஸர் தடுப்பூசி பெற்றுக் கொள்ளாத வர்களுக்கு, கிராமஅலுவலர் பிரிவு களில் ஏற்றப்படவுள்ளது.
முதற்கட்டமாக மட்டுவில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட சரசாலைவடக்கில் இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
இன்று சரசாலைதெற்கு பொதுநோக்கு மண்டபத்திலும், நாளை மட்டுவில் கிழக்கு ஆரம்ப சுகாதார நிலையத்தி லும், நாளைமறுதினம் மட்டுவில் வடக்கு சிறிவேற்பிள்ளை சனசமூக நிலைய மண்டபத்திலும், எதிர்வரும் 11ஆம் திகதி சந்திரபுரம் பொதுநோக்கு மண்டபத்தி லும் தடுப்பூசி ஏற்றப்படும். (ம-4-9)

## டிப்பர் மோதி இருவர் காயம்

துவிச்சக்கர வண்டியில் தனித் தனியாக பயணித்துக் கொண் டிருந்த சகோதரிகளை, பின்னால் பயணித்த டிப்பர் மோதித்தள்ளியது. அதில் இரு வரும் காயமடைந்தனர்.
இந்த விபத்து முறிகண்டி- செல்வபுரம் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.
காயமடைந்த இருவரும் பொதுமக்களின் உதவியுடன் கிளிநொச்சி மருத்துவமனை யில் சேர்க்கப்பட்டுள்ளனர். சாரதி கைது செய்யப்பட்டுள் ளார். (ம-4-113)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# பயங்கரவாதச் சட்டத்தை நீக்கு யாழ்ப்பாணத்தில் கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 8

**பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கக்கோரி, வடக்கு-கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், யாழ். நகரில் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**

வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கான நீதி, அரசியல்கைதிகளை நிபந்தனையில்லாமல் விடுதலை செய், தமிழினப் படுகொலைக்கான சர்வதேச நீதி, பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கு, சர்வதேசமே ஸ்ரீலங்கா அரசுக்கு இனியும் காலஅவகாசம் வேண்டாம், சர்வதேசமே நாம் அழுவது கேட்கவில்லையா?, வேண்டும் வேண்டும் சர்வதேச விசாரணை வேண்டும், எங்கே எங்கே உறவுகள் எங்கே?, இனப்படுகொலைக்கு சர்வதேச நீதிவேண்டும், ஐ.நா. அமைதிப்படை இலங்கைக்கு வர வேண்டும், கையளிக்கப்பட்ட உறவுகளுக்கு என்ன நடந்தது, வேண்டாம் வேண்டாம் ஓ.எம்.பி. வேண்டாம், விடுதலை செய் விடுதலை செய் அரசியல்கைதிகளை விடுதலை செய் உள்ளிட்ட பதாகைகளை ஏந்திவாறு கோஷங்களை எழுப்பிப்போராட்டத்தில் ஈடுபட்டனர். (ம-4-125)

## ஐஸ்போதையுடன் மன்னாரில் ஒருவர் கைது

மன்னார், மார்ச் 8

ஐஸ்போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் நேற்றுமுன்தினம் ஒருவர் கைதுசெய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மன்னார் இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய விசேட அதிரடிப்படையுடன் இணைந்து மன்னார், தாராபுரம் பிரதான வீதியில் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டபோதே குறித்த நபர் கைதுசெய்யப்பட்டார்.


கைதுசெய்யப்பட்ட நபரிடமிருந்து சுமார் ஒருகோடி ரூபா பெறுமதியான ஒருகிலோ ஐஸ்ரக போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது.

மன்னார், எருக்கலம்பிட்டிப் பகுதியைச் சேர்ந்த 36 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

கைதுசெய்யப்பட்ட நபரும், கைப்பற்றப்பட்ட ஐஸ்ரக போதைப்பொருளும் மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-14-56)





முல்லைத்தீவில் புதுக்குடியிருப்பு- மாணிக்கபுரம் பகுதியில் எரிவாயு அடுப்பு வெடிப்புச் சம்பவமொன்று பதிவாகியுள்ளது. சிலிண்டரைப் பெற்று 10 நாள்கள் கடந்த நிலையில் அடுப்பு வெடித்துச் சிதறியுள்ளது. (ம-4-19)

## ஊடகவியலாளர்களுக்கு சலுகையில் எரிபொருள்

யாழ்ப்பாணம், மார்ச் 8

இடர்காலங்களில் எரிபொருளைத் தடையின்றிப் பெற்றுக் கொள்ள ஊடகவியலாளர்களுக்கும் சந்தர்ப்பம் உள்ளது என்று யாழ். மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்தார்.

எரிபொருள் நிரப்பு நிலையங்களின் தலைமைக் காரியாலயங்களில் விண்ணப்பக் கடிதத்தைச் சமர்ப்பித்து, மாதாந்த எரிபொருளைத் தடையின்றிப் பெற்றுக்கொள்ளமுடியும்.

அங்கு தொடர்ச்சியாக எரிபொருளைக் கொள்வனவு செய்ய வேண்டும்.

இடர்காலம் வரும்போது மாத்திரம் இந்தச் சலுகையைப் பெற முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4-27)

## போதைப்பொருள் விற்பனை; சாவகச்சேரியில் ஒருவர் கைது

சாவகச்சேரி, மார்ச் 8

சாவகச்சேரி, சங்கத்தானை பகுதியில் ஹெரோய்ன் மற்றும் கஞ்சா விற்பனையில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் நேற்று முன்தினம் ஒருவர் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

சங்கத்தானை ரயில் நிலையப் பகுதியில் போதைப்பொருள் விற்பனையில் ஒருவர் ஈடுபடுகிறார் என இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சோதனையிலேயே குறித்த நபர் கைதுசெய்யப்பட்டார்.

சாவகச்சேரி மடத்தடிப் பகுதியைச் சேர்ந்த 25 வயதுடையவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சந்தேகநபர் சாவகச்சேரி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு மேலதிக விசாரணைகள் இடம்பெறுகின்றன. (ச-27)




குடுக்கிற தெய்வம் கூரையைப் பிய்ச்சுக் கொண்டு குடுக்கும், அதேமாதிரி எடுக்கிற தெய்வமும் குடலை உருவிக் கொண்டு எடுக்கும் கண்டியளோ. இவ்வளவுநாளும் வெள்ளி துலாவில நிண்ட விமல் வீரவன்ஸவுக்கு இப்ப ஏழரைச்சனி. அதுதான் வரிசையா ஆப்புக்கு மேல ஆப்பா வந்தபடியே இருக்கு.

என்னதான் மஹிந்த பிரதமரா இருந்தாலும், கோத்தா ஜனாதிபதியா இருந்தாலும் இந்த அரசாங்கத்தின்ர மெயின் சுவிட்ச் பஸில்தான். அப்பிடிப்பட்ட மெயின் சுவிட்ச்சில கைவைச்சால் கறண்ட் அடிக்கத்தானே செய்யும். அதுதான் விமலை தூக்கியடிச்சு மூலையில போட்டிருக்கு. உங்களுக்கு நினைவிருக்கோ தெரியாது, சுனாமி அடிச்சு எங்கட சனம் பள்ளிக்கூடங்களில தங்கியிருக்கேக்க அதைப் பாக்க அப்பவும் பிரதமரா இருந்து மஹிந்த வந்தவர். சும்மாவே எங்கட சனத்துக்கு அப்பவே மஹிந்த எண்டா கடுப்பு. இந்த கடுப்பில அப்ப இயக்கத்தைப் பற்றியும், எங்கட போராட்டத்தைப் பற்றியும் கேவலமாகக் கதைக்கிற விமலையும் தன்னோட கூட்டிக் கொண்டு வந்தால் சனம் பேசாமல் இருக்குமோ? மஹிந்தருக்கும், விமலுக்கும் விளக்குமாத்தைக் காட்டித்தான் சனம் கலைச்சது கண்டியளோ. அதுக்குப் பிறகுதான் இந்த விளக்குமாத்துக் கூட்டணி இன்னும் நெருக்கமாகி, கிட்டத்தட்ட 15 வருசமா ஒண்டா இருந்தவை. மஹிந்தவை நூறுசதவீதம் இனவாதியா மாத்தினதில பெரும்பங்கு உந்த விமலுக்குதான் இருக்கு.

ஆனால் எல்லா ஆட்டத்துக்கும் முடிவு வரத்தானே வேணும். அதுதான் இப்ப வந்திருக்கு. பாலும் பழமுமா இருந்தவை இப்பு கீரியும் பாம்புமா மாறிட்டினம். என்னதான் மஹிந்தர் இன்னமும் விமலில பாசமா இருந்தாலும், பஸிலும், கோத்தாவும் ஆளை ஒரு வழி பண்ணாமல் விடுறேலை எண்டு முடிவோடதான் இருக்கினமாம். அதுக்கேத்தபடி விமலும் கண்டபடி துள்ளிக்கொண்டு திரிய, ஆளின்ர பழைய வழக்குகளையெல்லாம் தூசு தட்டுப்படுகுதாம். அதில ஒண்டுதான், ஐ.நா.வின்ர மனித உரிமைகள் பேரவையின்ர பழைய ஆணையாளருக்கு எதிரா றோட்டை மறிச்சு அனுமதி எடுக்காமல் போராட்டம் நடத்தின வழக்கு. இப்பிடி என்னென்ன வழக்கெல்லாம் இருக்கோ அதுகளை வைச்சு ஆளின்ர அரசியலை இல்லாமல் செய்யிறதுதான் திட்டமாம். ரஞ்சன் ராமநாயக்கவை எப்பிடி உள்ளுக்க தள்ளி, அவரின்ர ஆய்க்கினையை நிப்பாட்டிச்சினமோ அதேபாணியில விமலின்ர வாய்க்கும் பூட்டுப் போடப்போகினம் எண்டு உள்வீட்டுக்கால பட்சிக்கு வந்த தகவல் சொல்லுது.

**வாயால வாழ்ந்த விமலுக்கு இப்ப அந்த வாயே வில்லங்கமா மாறிட்டுதே!**



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத மணல் அகழ்வை விரைந்து தடுக்க வலியுறுத்து!

கிளிநொச்சி, மார்ச் 8

**முல்லைத்தீவு, அம்பலவன்பொக்கனை கிராமஅலுவலர் பிரிவில் நடக்கும் சட்டவிரோத மணல் அகழ்வைத் தடுப்பதற்குப் பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்தப்பகுதி பொதுஅமைப்புக்கள் வலியுறுத்தியுள்ளன.**

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது;- இந்தக் கிராம அலுலவர் பிரிவில் அதிகளவில் சட்டவிரோத மணல் அகழ்வு நடைபெறுகின்றது. முள்ளிவாய்க்கால், வலைஞர்மடம், அம்பலவன் பொக்கணை, மாத்தளன் ஆகிய இடங்களில் நடக்கும் மணல் அகழ்வைக் கட்டுப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுக்கவேண்டும். மாத்தளன் சந்தியில் பொலிஸார் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுப்பதன் ஊடாக சட்டவிரோத மணல் அகழ்வைக் கட்டுப்படுத்த முடியும் - என்றார். (எ-13)






## மாமனிதர் சிவநேசனின் நினைவேந்தல் நிகழ்வுகள்

வவுனியா, மார்ச் 8

இலங்கை இராணுவத்தினரால் கொல்லப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் சிவநேசனின் 14ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்றுமுன்தினம் பல இடங்களிலும் கடைப்பிடிக்கப்பட்டது.

வவுனியா, சிதம்பரபுரம்- கற்குளத்தில் இடம்பெற்ற நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், கட்சி செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

வவுனியா வடக்கு புளியங்குளத்தில் இடம்பெற்ற நினைவேந்தல் நிகழ்வில் தமிழ் மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம்; சட்டத்தரணி காண்டீபன், மாவட்ட அமைப்பாளர் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர். மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய பகுதிகளிலும் நினைவேந்தல் நிகழ்வுகள் கடைப்பிடிக்கப்பட்டன. (ச)




'வியர்வைத்துளிகளின்' கூட்டமைப்பின் ஏற்பாட்டில், சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள், கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றன. கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றிலில் உரிமைகளை வலியுறுத்தி பெண்கள் பேரணியில் ஈடுபட்டனர். (ம-4-113)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மார்ச் 8

'பங்கேற்புப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புதல்' என்ற தலைப்பிலான மாநாடு திருநெல்வேலியில் உள்ள திண்ணை ஹொட்டலில் நாளைமறுதினம் காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. மேற்குறித்த நிகழ்வை சனச இன்டர்நஷனல் அமைப்பு ஏற்பாடு செய்துள்ளது. (ய)

* * *

## உதவிப்பணம் விநியோகம்

சாவகச்சேரி, மார்ச் 8

தென்மராட்சி பிரதேச அஞ்சல் அலுவலகங்களில் மார்ச் மாதத்துக்குரிய பொதுசன மாதாந்த உதவிப் பணம் மற்றும் நோய்களுக்கான கொடுப்பனவு விநியோகிக்கப்பட்டு வருகின்றது. கொடுப்பனவுகளை எதிர்வரும் 21ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ள முடியும் என்று பிரதேச செயலக சமூக சேவைகள் அலகினர் அறிவித்துள்ளனர். (ம-4-9)

* * *

## அருளாசியுரையும் வேதபாராயணமும்

யாழ்ப்பாணம், மார்ச் 8

உலகிலுள்ள அனைத்து மக்களும் நோய் நொடிகளிலிருந்து மீள, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், யாழ்ப்பாணம், சுன்னாகம் மயிலணி திருக்குடவாயில் ஸ்ரீ விஸ்வநாத சுவாமி கோவிலின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ சோ.சந்திரசேகரக்குருக்களின் அருளாசியுரையும் வேதபாராயணமும் நாளை செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணிக்கு இடம்பெறவுள்ளன. (ய)



## மாங்குளம் மருத்துவமனை அபிவிருத்திப் பணி ஆராய்வு

முல்லைத்தீவு, மார்ச் 8

முல்லைத்தீவு, மாங்குளம் ஆதார மருத்துவமனையில் நடைபெறுகின்ற அபிவிருத்திப் பணிகளை பிராந்திய மருத்துவ அதிகாரி மற்றும் மாங்குளம் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் நேரில் பார்வையிட்டனர்.

மருத்துவமனை வளாகத்திலுள்ள இரு மரங்களில் குளவிக்கூடுகள் காணப்படுகின்றமையால் நோயாளிகள் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்புக்கருதி அவற்றை அழிப்பது, திறந்த நிலையில் காணப்படுகின்ற கிணறு சீரமைக்கப்பட்டு பாவனைக்கு உட்படுத்துவது, மருத்துவமனையில் மின் இணைப்புக்களை கூடுதலாக உருவாக்குவது போன்ற விடயங்கள் ஆராயப்பட்டன. (ச-13)



## புதுக்குடியிருப்பில் பூங்கா திறப்பு

முல்லைத்தீவு, மார்ச் 8

புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் 2020ஆம் ஆண்டுக்கான 10 மில்லியன் ரூபா நிதியொதுக்கீட்டில் அமைக்கப்பட்ட புதுக்குடியிருப்பு பூங்கா கடந்த வெள்ளிக்கிழமை புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் அருகில் வைபவரீதியாகத் திறக்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு பிரதேச மக்களின் நீண்டகாலக் கோரிக்கைக்கு அமைய புதுக்குடியிருப்பு பிரதேசசபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் குறித்த பூங்கா அமைக்கும் திட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ச-19)

## சொற்பொழிவும் கருத்துப்பரிமாறலும்

கிளிநொச்சி, மார்ச் 8

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு 'நிலைபேறான எதிர்காலத்துக்காக இன்றே பால்நிலை சமத்துவத்துக்காக பாடுபடுவோம்' எனும் தொனிப்பொருளில் சொற்பொழிவும் கருத்துப்பரிமாறல் நிகழ்வும் நாளை முற்பகல் 9.30 மணியிலிருந்து 12.30 வரை கரைச்சிப் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்தியத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் நிகழ்வுக்கு அனைவரது ஆதரவையும் தந்துதவுமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட பிராந்திய இணைப்பாளர் ரி.கனகராஜ் தெரிவித்துள்ளார். (ம-14-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின்

## முல்லைத்தீவு மாவட்ட அமைப்பாளர் நியமனம்



முல்லைத்தீவு, மார்ச் 8
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முல்லைத் தீவு மாவட்டத் தேர்தல் அமைப்பாளராக ச.சத்தியசுதர்சன் நியமிக்கப்பட்டுள்ளார்.
முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் உறுப்பினராக செயற்பட்டுவரும் இவர், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முல்லைத் தீவு மாவட்ட தேர்தல் அமைப்பாளராகக் கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதி யுமான மைத்திரிபால சிறிசேனாவால் நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கான நியமனக்கடிதம் கட்சியின் தலைமை அலுவலகத்தில் கடந்த சனிக்கிழமை வழங்கப்பட்டுள்ளது. (ச-19)

# கசிப்பு உற்பத்தியால் குடும்ப வன்முறைகள்

## முக்கொம்பன் மாதர் சங்கம் விசனம்

**கிளிநொச்சி, மார்ச் 8**
**பூநகரி, முக்கொம்பன் கிராமத்தில் கசிப்பு விற்பனை காரணமாக, குடும்ப வன்முறைகள் அதிகரித்துள்ளன என்று அந்தப்பகுதி மாதர் சங்கம் தெரிவித்துள்ளது.**

போதையில் வரும் குடும்பத் தலைவர்கள், வீட்டிலுள்ளோரைத் தாக்கும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன என்றும், அதனால் குழந்தைகளின் உளநலம் பாதிக்கப்படுகின்றது என்றும் சுட்டிக் காட்டப்படுகின்றது.
கசிப்புக் காய்ச்சுவது தொடர்பாகப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டாலும் பொலிஸார் உரிய நடவடிக்கை எடுப்பதில்லை என்றும் கூறப்படுகின்றது.
பொலிஸார் கிராமத்தில் நடக்கும் கசிப்புச் காய்ச்சுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மாதர் சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-13)

## பூதன்வயல் பாடசாலைக்கு நிரந்தரக் கட்டடம் வேண்டும்

*பிரதேசசபை உறுப்பினர் கோரிக்கை*

கிளிநொச்சி, மார்ச் 8
முல்லைத்தீவு, கரைதுறைப்பற்று, பூதன்வயல் கிராமத்திலுள்ள பாடசாலைக்கு நிரந்தரக் கட்டடம் அமைத்துக் கொடுக்கப்படவேண்டும் என்று கரைதுறைப் பற்று பிரதேச்சபை உறுப்பினர் த.அமலன் கோரிக்கை விடுத்துள்ளார்.
இதுதொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-
ஆரம்பப் பாடசாலையான இந்தப் பாடசாலைக்கு இதுவரை நிரந்தரக் கட்டடங்கள் இல்லை. நிரந்தரக் கட்டடங்களை அமைப்பதற்கான முயற்சிகளை கல்வி அதிகாரிகள் எடுக்கவேண்டும். நிரந்தரக் கட்டடங்கள் இல்லாததால் மாணவர்கள் மகிழ்ச்சிகரமாக கற்றலில் ஈடுபடமுடியாத நிலைமை காணப்படுகின்றது. கட்டடங்களின் அவசியம் தொடர்பாக இறுதியாக நடைபெற்ற கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திலும் சுட்டிக்காட்டியுள்ளோம் - என்றார். (எ-13)



## மாணவர் ஒன்றியத்தின் வருடாந்த பொங்கல் விழா

யாழ்ப்பாணம், மார்ச் 8
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வடமராட்சி கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின், வருடாந்த பொங்கல்விழா வல்லிபுரம் ஆழ்வார் ஆலய வளாகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.
பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து, கலாசாரத் திடலில் பாரம்பரிய கலாசார விளையாட்டுக்கள் இடம்பெற்றன. கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் நான்காம் வருட மாணவர்கள் இதில் பங்கேற்றனர். (ம-4-125.27)

## ஐஸ்போதையுடன் இளைஞர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 8
ஐஸ்போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
இவரிடமிருந்து 4 கிராம் 900 மில்லிகிராம் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது என்றும் கைதானவர் திருநெல்வேலிப் பகுதியைச் சேர்ந்தவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-23)

## கஞ்சாவுடன் இருவர் கைது

சாவகச்சேரி, மார்ச் 8
கஞ்சா வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் இருவரை சாவகச்சேரி மதுவரி நிலையத்தினர் நேற்றுமுன்தினம் கைதுசெய்துள்ளனர்.
மீசாலைப் பகுதியில் இருவரிடம் சோதனையிட்டபோதே அவர்களிடமிருந்து கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. இருவரையும் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது எனத் தெரிவிக்கப்பட்டது. (ச-9)

## நந்திக்கடல் பாலத்தை புதிதாக புனரமைக்குக

*ரவிகரன் கோரிக்கை*



முல்லைத்தீவு,மார்ச் 8
வட்டுவாகல், நந்திக்கடல் பாலம் நிர்மாணிக்கப்பட்டு 72 ஆண்டுகளுக்கு மேலாகின்றது. அந்தப்பாலம் அடிக்கடி உடைவடைவதால் புதிய பாலம் அமைக்கப்படவேண்டும் என்று வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் கோரிக்கை விடுத்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்;
நீண்டகாலமாகப் பலத்த இடர்பாடுகளுக்கு மத்தியில் வட்டுவாகல், நந்திக்கடல் பாலத்தினூடாக மக்கள் பயணிக்கின்றனர்.
பிரதான பாலத்தின் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளாது அரசு தொடர்ச்சியாக இழுத்தடிப்புச் செய்து வருகின்றது.
புதியபாலம் அமைக்கப்படவேண்டும் என நாம் கடந்த காலத்தில் மாகாண சபையிலும், மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களிலும், பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களிலும் தொடர்ச்சியாக வலியுறுத்தியிருக்கின்றோம்.
வடக்கு மக்கள், கிழக்கு மக்கள் என்று மாத்திரம் அரசு தமது புறக்கணிப்பைக் காட்டவில்லை. வடக்கிலுள்ள பாலங்களையும் புறக்கணிக்கின்றது.
இனியாவது வட்டுவாகல்- நந்திக்கடல் பாலத்தை அமைக்க உரியவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார். (ம-4-246)

## அதிபர்கள் இடமாற்றலை செயற்படுத்தக் கோரிக்கை

கிளிநொச்சி, மார்ச் 8
கிளிநொச்சி மாவட்டத்தில் 7 ஆண்டுகள் கடந்து பணியாற்றும் அதிபர்களுக்கு இடமாற்றங்கள் வழங்கப்படவில்லை என்றும் இடமாற்றம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
மாவட்டத்திலுள்ள பல பாடசாலைகளில் அதிபர்கள் ஏழு வருடங்களைக் கடந்து தொடர்ந்தும் அதேபாடசாலைகளில் பணியாற்றி வருகின்றனர். அவர்களுக்கான இடமாற்றங்கள் வழங்கப்படவில்லை என்றும், வழமையான இடமாற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
இதுதொடர்பில் கிளிநொச்சி தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் கி.கமலராஜனிடம் கேட்டபோது, ஏழு வருடங்களைப் பூர்த்திசெய்த அதிபர்களின் இடமாற்றம் தொடர்பில் மாகாணக் கல்வி அமைச்சின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். (எ-214)

## விபத்தில் ஒருவர் காயம்


சாவகச்சேரி, மார்ச் 8
சாவகச்சேரி, பெரிய அரசடிப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கார்-மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் காயமடைந்துள்ளார்.
விபத்தில் காயமடைந்தவர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ச-9)

## கட்டுப்பாடுகளுடன் பங்குனி உற்சவம்

சாவகச்சேரி, மார்ச் 8
சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக, மட்டுவில் பன்றித் தலைச்சி ஆலயத்தில் பங்குனித் திங்கள் உற்சவம் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
எதிர்வரும் 21, 28 மற்றும் ஏப்ரல் 4, 11 ஆகிய நான்கு திங்கட்கிழமைகளில் பங்குனித் திங்கள் உற்சவம் நடைபெறவுள்ளது.
ஒதுக்கப்பட்ட இடத்தில் வர்த்தக நிலையங்களை இடைவெளிகளுடன் அமைக்கவும், மட்டுப்படுத்தப்பட்ட அளவில் அமைதியான முறையில், நேர்த்திக்கடன்களை மேற்கொள்ளவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ம-4-9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## பிரம்மஸ்ரீ. முத்துச்சாமி ஐயர் பாலகுருசாமிசர்மா

குடியிருப்பு, சுழிபுரத்தினை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பறாளாய் ஸ்ரீசிவசுப்பிரமணியசுவாமி தேவஸ்தான பரம்பரை குரு குகபூஜாதுரந்தரர் பிரம்மஸ்ரீ. முத்துச்சாமிஐயர் பாலகுருசாமிசர்மா அவர்கள் கடந்த (06.03.2022) ஞாயிற்றுக்கிழமை பறாளாய் ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமியின் பாதாரவிந்தங்களை சரணடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துச்சாமிஐயர் இராசலட்சுமி அம்மா தம்பதிகளின் சிரேஸ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான சண்முகக்குருக்கள் இராமலட்சுமி அம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், விசாலாட்சி அவர்களின் அன்புக் கணவரும், கோபாலகிருஷ்ணக்குருக்கள் (லண்டன்), முருகதாஸசர்மா (லண்டன்), ஜெகன்நாதசர்மா, சுதாமதி, கிருபாகரி, பிரபாகரசர்மா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கோ.கௌரி (லண்டன்), மு.கௌரி (லண்டன்), ஜெ.தாரணி (ஆசிரியை, யா/விக்டோரியா கல்லூரி - சுழிபுரம்), வரதராஜசர்மா, சற்குணராஜசர்மா, பி.பத்மினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், இரத்தினேஸ்வரி, காலஞ்சென்ற சண்முகநாதசர்மா, சரோஜினிதேவி, காலஞ்சென்ற பத்மாவதி, காலஞ்சென்ற சுசீலாதேவி, கல்யாணி, ஸ்ரீரமணசர்மா (அவுஸ்திரேலியா), விஜயலட்சுமி ஆகியோரின் அன்பு சகோதரனும், காலஞ்சென்ற சோமாஸ்கந்தக்குருக்கள், காலஞ்சென்ற இரத்தினேஸ்வரி, காலஞ்சென்ற பி.பா.தியாகராஜக்குருக்கள், சிவசண்முகானந்தேஸ்வரசர்மா, காலஞ்சென்ற சோமாஸ்கந்தசர்மா, காலஞ்சென்ற சிவகாங்கேயசர்மா, பிரசன்னவதனி (அவுஸ்திரேலியா), சத்தியவாகீஸ்வரசர்மா, காலஞ்சென்ற தியாகராஜசர்மா, காலஞ்சென்ற சதானந்தசர்மா, சுப்பிரமணியஐயர், காலஞ்சென்ற கோமளாம்பிகை, மார்க்கண்டேயக் குருக்கள், காலஞ்சென்ற சச்சிதானந்தசர்மா, காலஞ்சென்ற பரமேஸ்வரக்குருக்கள், வைத்தீஸ்வரசர்மா ஆகியோரின் அன்பு மைத்துனரும், மாளவிகா, நிவாஷினி, சைதன்யா, கீதன்சர்மா, வானதி, சனாதனசர்மா, கேயூரன்சர்மா, சுதர்மன்சர்மா, விந்தியா – விஜிதன்சர்மா, ஷண்மதுரசர்மா – சஹானா, யதுர்சன்சர்மா, ஜீவகன்சர்மா, கவின்சர்மா ஆகியோரின் அன்பு பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.03.2022) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடலானது திருவடிநிலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிறப்பு 28.04.1930

இறப்பு 06.03.2022

குடியிருப்பு
சுழிபுரம்

தகவல்:
குடும்பத்தினர்
021-225-0248, 077-756-9452

(CR 8016) (4/6)

# மரண அறிவித்தல்



## கிட்டிணன் கோபாலன்

கூவில் புலோலி தென்மேற்கு, புலோலியை பிறப்பிடமாகவும் பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்ட கிட்டிணன் கோபாலன் அவர்கள் கடந்த (03.03.2022) வியாழக்கிழமை பிரான்சில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிட்டிணன் செல்லம்மா தம்பதிகளின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற வீரகத்தி மற்றும் செல்லம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகனும், தவமணி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான பொன்னையா, சிவபாக்கியம், சிவப்பிரகாசம், லக்சுமி, சந்திரசேகரம், விஜயரட்ணம், நற்குணம் மற்றும் சற்குணம், மதிவதனி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், கிருஷ்ணானந்தன் (பிரான்ஸ்), பவானி (பிரான்ஸ்), கோபாலகிருஷ்ணன் (லண்டன்), சிவாகிருஷ்ணன் (பிரான்ஸ்), கிருஸ்ணமோகன் (லண்டன்) ஆகியோரின் அன்புத்தந்தையும், கனகதுர்க்கா (பிரான்ஸ்), கிருஷ்ணகுமார் (பிரான்ஸ்), கிருஷ்ணசுபரதி (லண்டன்), கீர்த்திகா (பிரான்ஸ்), ரேகா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், அனோஜன், அனோஜினி, அஜந்தன், அருண்குமார், அபிராமி, அச்சுதன், அஜனி, அரவிந்தன், வைஷ்ணவி, வைஷாளி, வைஷ்ணி, ஆதிரிஜன், ஆதவன், றெமோஜன், கிருஷ்ணி ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.03.2022) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் (இலங்கை நேரப்படி) 1 Arenuedu marechal juin 95503 Gonnesse எனும் இடத்தில் நடைபெற்று பிற்பகல் 4.30 மணியளவில் 95 rue Narcel sembat 93430 Villetaneuse என்னும் முகவரியில் அமைந்துள்ள மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு
கிருஷ்ணானந்தன்(ஆனந்தன்) - மகன்:- +33647854485 (பிரான்ஸ்)
பவானி - மகள்:- +33769696426 (பிரான்ஸ்)
கோபாலகிருஷ்ணன்(ஜீவன்) - மகன்:- +447412655205 (லண்டன்)
சிவாகிருஷ்ணன்(சிவா) - மகன்:- +33603673374 (பிரான்ஸ்)
கிருஷ்ணமோகன்(மோகன்) - மகன்:- +447429200392(லண்டன்)
செல்வகிருஷ்ணன்(செல்வம்) - பெறாமகன்:- +94778695557, 0212260045 (இலங்கை)
கிருஷ்ணகுமார்(குமார்) - மருமகன்:-+33648291906 (பிரான்ஸ்)

(CR 37603) (4/6)

பிறப்பு 03.09.1945

இறப்பு 03.03.2022

கூவில், புலோலி தென்மேற்கு, புலோலி.

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## தமிழகத்தின் தலையீடே தேவை

சீனா, இந்தியா ஆகிய இரண்டு நாடுகளையும் இலங்கை இதுவரை போக்குக்காட்டி, ஏய்த்து வந்தது. ஆனால், இப்போது அவ்வாறான இலங்கையின் விலாங்கு மீன் பாணியிலான சித்து விளையாட்டுக்கு இந்தியா முடிவு கட்ட முயல்வதுபோல தெரிகின்றது. பொருளாதாரத்தில் சேடம் இழுக்கும் இலங்கைக்கு நிதி உதவி வழங்குவதற்கு இந்தியா முன்வந்தது. முதற் கட்டமாக நிபந்தனைகள் இன்றி நிதி வழங்கியது. ஆனால், ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் நிதியை வழங்குவதற்கு இந்தியா சில நிபந்தனைகளை விதித்துள்ளது. இன்னொருவகையில் சொல்வதானால், சீனாவை விவாகரத்து செய்துவிட்டு இந்தியாவின் பக்கம் வரவேண்டிய நிர்ப்பந்தம் இலங்கைக்கு.

1987ஆம் ஆண்டு இந்திய-இலங்கை ஒப்பந்தம் செய்வதற்கான சூழல் ஏற்பட்டு, இந்தியாவின் தலையீட்டால் '13'ஆவது திருத்தச் சட்டமும் மாகாணசபை முறைமையும் கொண்டுவரப்பட்டது. இப்போதும் இந்தியா தனது பிடியை இலங்கையில் உறுதிப்படுத்திக் கொள்வதற்கான சூழல் கனிந்திருக்கின்றது.

ஆனால், இந்தியா அதனைப்பயன்படுத்தி தனது பொருளாதார மூலோபாய நலன்களை உறுதிப்படுத்துவதிலேயே கவனம் செலுத்தியுள்ளது. நீண்ட கால நோக்கில் தனது தென்கோடியின் பாதுகாப்பை நிரந்தரமாக உறுதிப்படுத்தக்கூடியவகையில் ஓர் ஏற்பாட்டைச் செய்வதற்கான வாய்ப்பை இந்தியா இழக்கின்றதா என்று எண்ணத் தோன்றுகின்றது.

இலங்கையின் ஆட்சிப்பீடம் ஏறும் சிங்கள ஆட்சியாளர்கள் எவரையும் நம்பமுடியாது. ஏனெனில் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் சரத்துக்களையே ஒரு தலைப்பட்சமாக மீறியவர்கள் சிங்கள - பௌத்த வெறியேறிய தென்னிலங்கை ஆட்சியாளர்கள். அப்படிப்பட்டவர்களிடம், தனது பொருளாதார மூலோபாயத்திட்டங்களின் உறுதிப்பாட்டை மாத்திரம் இந்தியா எதிர்பார்ப்பது புத்திசாலித்தனமானது அல்ல. இந்தியாவின் தென்கோடியின் பாதுகாப்பை உறுதிப்படுத்தக்கூடிய ஒரேதரப்பு தமிழர்கள்தான். தமிழர்களுக்கான சுயாட்சியைப் பெற்றுக்கொடுப்பதன் ஊடாக இந்தியா தென்முனையின் பாதுகாப்புத் தொடர்பில் கவலைகொள்ளாமல் இருக்முடியும். வடக்கு - கிழக்கு தமிழர்கள் தமது தொப்புள்கொடி உறவுகளாக தமிழகத் தமிழர்களையே இப்போதும் கருதுகின்றார்கள். எனவே அவர்களுக்கு துரோகம் இழைக்கும் வகையில் சீனாவின் ஆதிக்கத்துக்கு வடக்கு-கிழக்கில் தமிழர்கள் இடமளிக்கமாட்டார்கள்.

தமிழர் தேசத்தைத் தமிழர்களே ஆளுவதற்கு வழி சமைப்பதன் ஊடாக இந்தியா இதனைச் செய்ய முடியும். ஆனால், இந்திய அரசு தவறிவிட்டது. இந்திய அரசுக்கு அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்கு தாயகத் தமிழர்களுக்கு இருக்கும் ஒரே ஆயுதம் தமிழகம் தான். தமிழகம் ஊடாக இந்திய மத்திய அரசுக்கு அழுத்தங்களைப் பிரயோகித்து, '13'ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தல் என்ற புராணத்தை மாற்றியமைத்து, தமிழர்களுக்கு சுயாட்சியைப் பெற்றுக் கொடுக்க வழிசெய்யவேண்டும்.

இலங்கைஅரசு இந்தியாவின் நிபந்தனைகளுக்கு இணங்குவதை தவிர வேறு வழியில்லை என்ற காலச் சூழலே தோன்றிவருகின்றது. சீனவங்கிகள் இலங்கைக்குக் கடன் கொடுக்கத்தயாரில்லை என்ற நிலையில், இந்தியாவைத் தவிர வேறு தெரிவும் இல்லை. இந்தியாவைத் தாண்டி மேற்குலகம் இலங்கைக்கு உதவாது. எனவே இந்தியா இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்த முனையும் அதேநேரத்தில், தமிழகம் ஊடாக ஈழத் தமிழர்களும் தங்களின் பிரச்சினைக்கான தீர்வுக்கு இதை மாற்றிக்கொள்ளவேண்டும்.

நாளொரு நல்வார்த்தை

உங்கள் வாழ்க்கையின் மகிழ்ச்சி உங்கள் எண்ணங்களின் தரத்தைப் பொறுத்தது.
- மார்கஸ் ஆரேலியஸ்




# அரசமைப்பில் மாற்றம் ஏற்பட்டாலே இனப்பிரச்சினைக்குத் தீர்வு கிட்டும்

## சாள்ஸ் எம்.பி தெரிவிப்பு



**வவுனியா, மார்ச் 8**

**தமிழர்கள் கௌரவமாக வாழக் கூடிய வகையில், அரசமைப்பில் மாற்றம் கொண்டு வந்தால் மட்டும்தான் தமிழர்களுடைய இனப் பிரச்சினைக்குத் தீர்வு கிட்டும் என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்;

13ஆவது திருத்தச் சட்டம் ஏற்கனவே நடைமுறையில் இருப்பது. தமிழர்களுடைய தீர்வின் இலக்கு என்பது வேறு. நான் இந்திய தூதுவர்களைச் சந்தித்தபோது கூட 13 ஆவது திருத்தச் சட்டத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என்று தெரிவித்திருந்தேன்.

13 ஆவது திருத்தச் சட்டத்தில் எந்தவிதமான காணி அதிகாரங்களும் இல்லை. வடமாகாணத்தில் மட்டும் 44 வீதமான நிலம் வன இலாகாவிடம் இருக்கின்றது. மகாவலி, வனஜீவராசிகள்திணைக்களம், தொல்பொருள் திணைக்களம் போன்றன தன்னிச்சையாக நிலங்களை வர்த்தமானியூடாக கையகப்படுத்தும் அதிகாரம் இருக்கும்போது, 13 ஆவது திருத்தச் சட்ட வரைவு அதனைத் தடுக்க முடியாது. அதில் காணி அதிகாரம் இல்லை. எனவே எப்படி 13 ஆவது திருத்தச் சட்டம் தமிழர்களுக்குத் தீர்வாக அமையும்.

13 ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக நடைமுறைப் படுத்தப்பட்டால் தமிழர்களுக்குத் தீர்வு கிடைக்கும் என்றால் 1987ஆம் ஆண்டே தமிழர்களுக்குத் தீர்வு கிடைத்திருக்கும். 13ஆவது திருத்தச் சட்டம் முழுமையான தீர்வாக அமையாது - என்றார். (ம-4,110)

# எரிபொருள் தட்டுப்பாடு: வெதுப்பகங்கள் பூட்டு!



கிளிநொச்சி, மார்ச் 8

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள், சமையல் எரிவாயு மற்றும் கோதுமை மா ஆகியவற்றுக்கான தட்டுப்பாடு காரணமாக, கிளிநொச்சி மாவட்டத்தில் சுமார் 15க்கும் மேற்பட்ட உணவகங்கள் மற்றும் பல வெதுப்பகங்களை மூட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதனால் உணவகங்கள் மற்றும் வெதுப்பகங்களில் பணிபுரிவோர் தமது வாழ்வாதாரத்தை இழந்துள்ளனர். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக தட்டுபாட்டை நிவர்த்தி செய்யவேண்டும் என்று அவற்றின் உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-4,113)

நாளை 09.03.2022 புதன்கிழமை மாசி 25
சுபநேரம் : 04.54 - 06.24
ராகுகாலம்: 12.24 - 01.54

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 16 . 06 . 1935

விண்ணில் 06 . 02 . 2022



### அமரர் திருச்செல்வம் மரியம்மா (இராசமணி)

நெஞ்சம் கனக்குது விழிநீர் சொரியுது
உம் நினைவுகள் நெஞ்சில் ஊஞ்சல் ஆடுது
வஞ்சமில்லா உள்ளன்புடன் பழகிய
உங்கள் நினைவுகள் எல்லாம் நெஞ்சை உருக்குது
உங்களின் ஆத்ம இளைப்பாற்றிக்காக
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

27/15 றக்கா றோட், கச்சேரி, யாழ்ப்பாணம்.

(CS 43424) (3/6)

உங்கள் பிரிவால் துயருறும் குடும்பத்தினர்



## மரண அறிவித்தல்

தோற்றம் 10 . 06 . 1942

மறைவு 06 . 03 . 2022



### கதிரேசு விக்கினேஸ்வரன்

(ஓய்வுநிலை இலங்கை வங்கி உத்தியோகத்தர் )

யாழ். மூளாய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் மட்டுவில் தெற்கு சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட கதிரேசு விக்கினேஸ்வரன் 06.03.2022 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரேசு - அன்னப்பிள்ளை தம்பதியின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லையா - பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற செல்வநாயகதேவியின் அன்புக் கணவரும் நடேஷ்வரன், பகீரதி, கிருஷ்ணதாசன், இன்பரதி, விஜயரதி, விஜிதரன் ஆகியோரின் பாசமிகுதந்தையும், மயூரனின் பெரிய தந்தையும், வள்ளிநாயகி, கயிலைநாயகி, செல்வநாயகி இராஜேஸ்வரன், கேதீஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் Dr செல்வநாயகராஜா, காலஞ்சென்ற, செல்வநாயகமலர், மற்றும், செல்வநாயக சோதி, செல்வநாயகதாசன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் கவிதா, கணேசநாதன், தவராஜா, நிரைந்தி, துவாகரன், மேதுஷா ஆகியோரின் அன்பு மாமனாரும், நவீனா, சகானா, சயினா, பிரவின், அபிரோசன், டெய்சிகா, ஆதவன், பிரணாஷ் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.03.2022 ) செவ்வாய்க்கிழமை மதியம் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நுணாவில் மேற்கு குச்சப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி

(CS 43136) (3/6)

தகவல் குடும்பத்தினர்


# எரிபொருள் தட்டுப்பாட்டால் மருந்து விநியோகம் பாதிப்பு

**கொழும்பு, மார்ச் 8**

**எரிபொருள் நெருக்கடியால், மருந்து விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது என்று அகில இலங்கை தனியார் மருந்தக உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.**

மொத்த விநியோகஸ்தர்கள் மருந்தகங்களுக்கு மருந்துகளைக் கொண்டு செல்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

ஊசி மருந்துகள் மற்றும் தடுப்பூசிகளுக்கு குளிர்சாதனப்பெட்டியில் களஞ்சியப்படுத்தல் அவசியமாகும்.

இதற்கு தற்போது மின்பிறப்பாக்கிகளே பயன்படுத்தப்படுகின்றன.

அதனால் மின்பிறப்பாக்கிகளுக்கு டீசல் பெற்றுக்கொள்வது சவாலாகவுள்ளது.

எனவே நோயாளர்களுக்கு விற்பனை செய்யப்படும் மருந்துப் பொருள்களின் பாதுகாப்பு மற்றும் பயனுறுதியை நிச்சயம் செய்து கொள்வதற்கு அரசு மொத்த விநியோகஸ்தர்களுக்கும் மருந்தக உரிமையாளர்களுக்கும் மின்சாரத்தைத் தடையின்றி வழங்க வேண்டுமென்றும் சங்கம் வலியுறுத்தியுள்ளது. (ம-4-ரீ1)

## எரிபொருள் நெருக்கடி விரைவில் முடிவுக்கு!

கொழும்பு, மார்ச் 8

இந்த வாரத்துக்குள் போக்குவரத்து மற்றும் மின்பிறப்பாக்கிகளுக்கு அவசியமான எரிபொருள் கையிருப்புக்கள் உறுதிசெய்யப்படும் என்று அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடு முழுவதுமுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு டீசல் மற்றும் பெற்றோல் விநியோகம் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதனால் எரிபொருள் நெருக்கடி ஒருசில தினங்களுக்குள் முடிவுக்கு வந்து விடும். மின்வெட்டுகளும் இடம்பெறமாட்டா.

டீசல் ஏற்றிய கப்பல்கள் வந்தவுடன், அனைத்தும் வழமைக்குத் திரும்பி விடும். பாடசாலைப் போக்குவரத்திலும் பாதிப்பு ஏற்படமாட்டாது - என்றார். (ம-4-ரீ1)

## அமெரிக்காவுக்குச் சேவையாற்றும் நிதியமைச்சரை பதவி நீக்குங்கள்

### அப்புஹாமி எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 8

அமெரிக்காவுக்குச் சேவையாற்றும் அமெரிக்கப் பிரஜை ஒருவர் ஏன் நிதியமைச்சராகப் பதவி வகிக்கின்றார். அவரை உடனடியாகப் பதவி நீக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாட்டைக் காட்டிக்கொடுக்க விரும்பவில்லை என்றால், அமெரிக்காவுக்காகப் பணிபுரியும் எந்தவொரு தனிநபரையும் அரசிலிருந்து நீக்குமாறு தற்போதைய நிர்வாகத்தைக் கேட்டுக்கொள்கின்றோம்.

அவ்வாறு செய்யத் தவறினால் நாட்டுக்குள் இருக்கும் ஒவ்வொரு தனிமனிதனும் நாட்டையும், மக்களையும் காட்டிக் கொடுப்பதாகவே அர்த்தமாகும்- என்றார். (ம-4-இ)

## நாவலர் நினைவுச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மார்ச் 8

நாவலர் பெருமான் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக, யாழ்.மாவட்ட இந்து சமய அறநெறிப் பாடசாலைகளில் வாராந்தச் சொற்பொழிவும் மாதந்தோறும் நாயன்மார் குருபூஜை நிகழ்வும், வேலணை வடக்கு இலந்தைவனம் சித்தி விநாயகர் அறநெறிப் பாடசாலையில் எதிர்வரும் 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளன.

சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறும் இந்த நிகழ்வில், இளம் சைவப்புலவர் த.மனோஜ்குமாரின் 'நாவலர் பெருமானின் நூற்பணிகள்' என்னும் தொனிப்பொருளில் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்வும், அதனைத் தொடர்ந்து சொற்பொழிவிலிருந்து வினாக்கள் தொடுக்கப்பட்டு மாணவர்களுக்கான பாராட்டுப் பரிசில்கள் வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளன. (ய)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Ideal Finance உம், Mahindra Finance உம் கைகோர்த்து Mahindra Ideal Finance என்ற புதிய அமைப்பாக உருவெடுக்கின்றன. இவ்வமைப்பு இலங்கையில் புதிய நிதித் தயாரிப்புக்களையும், சேவைகளையும் தந்து, உயரும் வாடிக்கையாளர்களை வலுவூட்டும்

- பரந்த கிளை வலைப்பின்னல்
- Fitch தரப்படுத்தல் AA- (நிலையான உறுதிப்பாடு)
- மாறாத நம்பிக்கை மற்றும் உயர்ந்த சேவை

**எமது தயாரிப்புகள்**

| தங்கக் கடன்கள் | தனிப்பட்ட கடன்கள் | நுகர்வோருக்கான நிலையான கடன்கள் | வாகன லீசிங் |
|---|---|---|---|

இலங்கை – BFSI இல் மிகச்சிறந்த 10 வேலைத்தளங்களில் ஒன்றாக (GPTW, 2021)

www.mahindraifl.lk | Hotline Number: 011 7 724 724

2011 இல. 42 நிதி வர்த்தக சட்டத்தில் அனுமதிப்பத்திரம் [illegible] | கூட்டிணைவு சான்றிதழ் இல. PB 4963 (திகதி – 24/1/2021)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பால்நிலை சமத்துவத்தில் நிலைபேறான அபிவிருத்தி

சர்வதேச மகளிர்தினம் இன்றாகும். இதை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.

உதயணி நவரத்தினம்
*கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்.*

பொதுவாக ஒவ்வொருவருடமும் பல்வேறுபட்ட சர்வதேச நாள்கள் பிரகடனப்படுத்தப்பட்டு அவை சார்ந்த முக்கியத்துவமும் விழிப்புணர்வும் மக்களுக்கு ஏற்படுத்தப்படுகின்றன. அந்தவகையில் மார்ச் 8ஆம் திகதி சர்வதேச மகளிர் தினமாக ஐக்கிய நாடுகள் சபையால் அறிவிக்கப்பட்டுள்ளது.

1975ஆம் ஆண்டு மார்ச் மாதம் 8ஆம் திகதி சர்வதேச மகளிர் தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. மார்ச் 8ஆம் திகதியைப் பெண்கள் தினமாகப் பிரகடனப்படுத்தியமைக்கு வரலாற்றுப் பின்னணி உள்ளது. குறிப்பாக காலங்காலமாகப் பெண்களுக்கு இழைக்கப்படும் பாரபட்சம், வன்முறைகள், உரிமை மீறல்களைப் பெண்கள் தகர்த்தெறிந்து உரிமைக்காகக் குரல்கொடுத்து வெற்றி அடைந்த நாளே இந்த நாளாகும்.

**வரலாற்றுப் பின்னணி**

மகளிர் தினம்பற்றி வரலாற்றுரீதியாக நோக்கின், அமரிக்காவின் நியூயோர்க் நகர ஆடைத்தொழிற்சாலையில் கடமையாற்றிய பெண்கள் மிகவும் நலிவுற்ற வேலைச்சூழல் மற்றும் ஆண்களுக்கு வழங்கப்பட்ட சம்பளத்தில் அரைவாசியே பெற்றனர். வேலைப்பளுவும் அவர்களுக்கு அதிகம் இருந்தது. இதற்கெதிராகப் பெண்கள் 1857ஆம் ஆண்டு மார்ச் மாதம் 8ஆம் திகதி வீதியில் இறங்கி தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அதில் வெற்றியும் கண்டு உரிமைகளைப் பெற்றார்கள்.


பெண்கள் கடந்த 100 வருடகாலத்தில் பல வெற்றிகள், உரிமைகளை வென்றெடுத்தாலும் 21ஆம் நூற்றாண்டில் என்று நோக்கும்வகையில், பெண்கள் பல தளங்களிலும் பாரபட்சம், வன்முறைகள் எனப் பல பிரச்சினைகளைத் தமது நாளாந்த வாழ்வில் எதிர்கொள்கின்றார்கள்.

குறிப்பாக மனித உரிமைகள் தொடர்பான பிரகடனங்கள் உருவாக்கிய பின்னரும்கூட, பெண்கள் உரிமைகள் தொடர்பாக ஏன் விசேட கவனம் செலுத்தவேண்டிய தேவை ஏற்பட்டது? எமது சமூகநிலை காரணமாக குடும்ப, அரசியல், சமூக, பொருளாதார, கலாசார தளங்களில் பெண்கள் உரிமைகளை அடைவதில் உள்ள பிரச்சினை காரணமாகப் பெண்கள் உரிமைகள் தொடர்பாக சிறப்புக் கரிசனை எழுப்பத் தொடங்கினார்கள். குடும்பத்தைப் பல்வேறுபட்ட உள, சமூக, பொருளாதார பிரச்சினைகளில் இருந்து பாதுகாத்து குடும்ப ஆரோக்கியத்தைப் பேணுவதில் பெண் முக்கிய பங்காற்றுகின்றாள்.

குறிப்பாக குடும்ப அலகினுள் மனிதாபிமான பண்புகளை ஏற்படுத்துவதில் தாயின் பங்களிப்பு அளப்பரியது ஆகும்.

ஆரோக்கியமான குடும்பம் ஆரோக்கியமான சமூகத்தைத் தோற்றுவிக்கின்றது. எனினும் துரதிர்ஷ்டமாகப் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் வீடுகளிலும் ஏனைய தளங்களிலும் நடைபெற்றாலும் அதனை வெளிப்படுத்தாமல் மௌனமாகவே வாழ்கின்றார்கள். அதற்கு முக்கிய காரணம் வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்கள் தொடர்பான சமூகப்பார்வை மற்றும் விமர்சனங்கள்.

எமது சமுகத்தைப் பொறுத்தவரை ஆண், பெண் என்ற பால்நிலை வேறுபாட்டுடனான சமூகமயப்படுத்தல், 30 வருடகால போர்ச்சூழல், அதனால் ஏற்பட்ட தாக்கங்கள், இன்றைய போருக்குப் பிற்பட்ட காலப்பகுதி மற்றும் இதனால் ஏற்பட்ட குடும்ப, சமூகக் கட்டமைப்புக்கள், உடைவுகள் என்பன பெண்கள் சமத்துவமான நிலையைப் பெறுவதில் சவாலாக உள்ளன. இதனை நீக்க பெண்களை பொருளாதார ரீதியாகவும் அறிவியல் ரீதியாகவும் முன்னேற்றத் தேவையான வகையில் செயற்படல் அவசியமாகும்.



**இந்த வருட தொனிப்பொருள்**

இந்த வருடத்துக்கான தொனிப்பொருளாக சர்வதேச பால்நிலை சமத்துவத்தின்மூலம் எதிர்காலத்தில் நிலைபேறான அபிவிருத்தி அடைதல் என்பது அமைக்கின்றது. அதேவேளை இலங்கையின் மகளிர் விவகார அமைச்சின் மகளிர் தின தொனிப்பொருள் 'நாடும்-தேசமும் - உலகமும் அவளே' என்பதாகும். இலங்கையைப் பொறுத்தவரை இந்த வருடத் தொனிப்பொருள் 'பெண்கள் அபிவிருத்தி அமைச்சின் பெண்களை வலுப்படுத்தல், மனிதத்துவத்தை வலுப்படுத்தல்' என்பதாக அமைகின்றது. பெண்கள் சமூகப் பொருளாதார நிலையில் வலுப்படுத்தப்படும்போது மனிதத்துவத்துக்கு வலுச்சேர்க்கலாம். அதனூடாக நீடித்து நிலைத்திருக்கும் அபிவிருத்தி நோக்கிய நகர்வுகள் சிறப்பாக அமையும். அத்துடன் சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சின் தொனிப்பொருளாக 'பெண்களுக்கு சிறந்த நாடு' என்பது அமைகின்றது.

எமது சமூகத்தைப் பொறுத்தவரை கடந்த 100 ஆண்டு காலப்பகுதியில் பெண்கள் பல்வேறு முன்னேற்றங்களை அடைந்துள்ளார்கள். ஏனைய தென்னாசிய நாடுகளுடன் ஒப்பிடும்போதும் இலங்கையில் பெண்களது எழுத்தறிவு வீதம் ஆண்களுக்கு நிகராக 90 வீதத்தைத் தாண்டியுள்ளது. பெண்களின் பொருளாதாரப் பங்களிப்பை நோக்கில், எமது அந்நியச் செலாவணி வருமானமீட்டலில் பெண்கள் முதுகெலும்பாகத் திகழ்கின்றனர். ஆடைக்கைத்தொழில் மற்றும் வெளிநாட்டுவேலை என்பவற்றின் மூலம் பெண்கள் தேசியப் பொருளாதாரத்துக்கு உயர் பங்களிப்பை வழங்குகின்றனர்.

தீர்மானம் எடுக்கும் மட்டங்களிலும் பெண்களின் பிரவேசம் சாதகமாக அமைகின்றது. குறிப்பாக சமூக மட்ட அமைப்புக்கள், அரசியல், தொழிற் தளங்களில் பெண்களின் பங்களிப்பு அதிகரித்துள்ளது.

கடந்த சில தசாப்தகாலமாக கிராமமட்ட அமைப்புக்கள் பெண்களை உள்வாங்க வேண்டியதன் முக்கியத்துவத்தை உணர்ந்து செயற்படுகின்றமை சாதகமான மாற்றமாகும். எனினும் அவர்கள் அந்த அமைப்புக்களின் தீர்மானம் எடுக்கும் மட்டங்களில் தலைவர், செயலாளர், பொருளாளர் என்னும் பதவிகளில் உங்வாங்கப்படுவது இன்றளவும் குறைவாகவே இருக்கின்றது. அதில் ஓர் எழுச்சியான மாற்றம் வரவேண்டும்.

அரசியலை எடுப்போமானால் உலகின் முதலாவது பெண் பிரதமராக சிறிமாவோ பண்டாரநாயக்க தெரிவுசெய்யப்பட்டார். 1931ஆம் ஆண்டு பெண்களுக்கு வாக்குரிமை வழங்கிய முதலாவது தென்னாசிய நாடு என்ற பெருமை இலங்கைக்கு உண்டு.

எனினும் எமது தேசிய அரசியலில் பெண்களின் பங்களிப்பு 6 வீதத்தைத் தாண்டவில்லை. அத்துடன் உள்ளூராட்சி சபைகளில் 25 வீதம் கோட்டா முறை கொண்டுவரப்பட்டு பெண்களின் அரசியல் பிரவேசத்துக்கு வழிவகுத்தமையால் பல ஆளுமைமிக்க பெண்கள் அரசியலில் பிரவேசிக்க வாய்ப்பளித்துள்ளது.

எது எப்படியாயினும் ஒப்பீட்டளவில் இன்று பெண்களின் உலகம் பல துன்பங்களைத் தாண்டியே பயணப்பட்டுக் கொண்டிருக்கின்றது. பெண்களுக்கு சமத்துவமும் - சுதந்திரமும் வழங்கவேண்டியது இன்று காலத்தேவை.

ஆரோக்கியமான உலகமொன்று கட்டியெழுப்பப்பட பெண்களின் வகிபங்கு காலத்தேவை. இதை அனைவரும் உணர்ந்துகொள்ள வேண்டும்.

## அவள் வாழ்வில்...

உலகிலே இருசாதி உயர்வான மனித சாதி
பலமான அறிவென்ற பகுத்தறிவு பெற்று
அவனியில் கொடையென அரும்பிறப்பாகி
தவமாகும் வாழ்வினைத் தரணியில் வாழாது
படைக்கின்ற பெண்மையைப் பாடாய்ப் படுத்தி
விடையின்றி நித்தமும் விழிநீர் சிந்தியே
திரும்பும் இடமெங்கும் தீராத வன்முறைகள்
விரும்பிய வாழ்விலும் விறலியும் தொடர்ந்து
கயமைக் கொள்கைகளாய் கலங்கிநின்று
சுயமது இழந்து சுதந்திரம் தேடாது
தந்தைவழி மரபின் தாராள ஈகையால்
சிந்தையும் கலங்கி சீரழிவுகளோடு
அன்பினை விதைத்து அவனியில் சிறந்து
என்பும் உரியது என்றும் பிறர்க்கென
சமூகக்கொள்கைகள் அந்தம் பாடிட
சுமுகம் இன்றி சுகந்தமும் வீசாது
வாழும் பெண்மையை வதைக்கும் வல்லினம்
பாழும் உலகினில் பற்பல துயரை
அறிவியல் உலகிலும் அவளுக்கு ஈந்திடும்
[illegible] கொஞ்சமா
[illegible] பங்குனி எட்டே
பூவையவள் பொழுதினில் புலருமோ நிம்மதி?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** குடும்பத்தில் நீங்கள் எதிர்பார்த்த நல்ல விஷயம் நிறைவேறும். பொறுமையுடன் எந்தவொரு விடயங்களையும் அணுகி வெல்வீர்கள். பணி பற்றிய திட்டம் நிறைவேறும். யாருக்கும் கடன் தரவேண்டாம்.

**இடபம்:** ஊக்கத்துடன் செயற்பட்டு நன்மை பெறுவதால் உற்சாகம் கூடும். கடன் விடயத்தில் கவனமாக இருக்கவும். பணி சிறக்கும். வீண் செலவுகள் ஏற்படும். வியாபாரம் சுமாராக இருக்கும்.

**மிதுனம்:** எதிர்பாராத விஷயம் நடக்கும். மகிழ்ச்சி அதிகரிக்கும். குடும்பத்தினரின் ஆதரவு மனஉற்சாகம் தரும். மனஅழுத்தம் ஏற்பட்டாலும் அதைசமயோசிதமாகச்சமாளிப்பீர்கள்.

**கடகம்:** உடன்பிறந்தவர்களுக்கு ஏற்பட்ட சிறு சிரமத்தைத் தீர்ப்பீர்கள். பொறுமை மிக அவசியம். ஆர்வத்துடன் பிறருக்கு உதவுவீர்கள். தேவையான பணம் கைக்கு வருவதற்கு பலர் உதவுவார்கள்.

**சிம்மம்:** நல்ல காரணத்தால் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். குழந்தைகளின் விருப்பத்தை நிறைவேற்றுகையில் கடுமை காட்டவேண்டாம். எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**கன்னி:** குடும்பத்தினரை அனுசரித்துச் சென்று நன்மை காண்பீர்கள். நீங்கள் முன்பு செய்த உதவிக்குப் பாராட்டை எதிர்பார்க்கவேண்டாம். சுபச்செலவுக்கு வாய்ப்பு உண்டு.

**துலாம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதை தவிருங்கள். அலைச்சல், செலவு ஏற்படும். உறவினரது செயலை இயல்பாக ஏற்பீர்கள். சகோதர, சகோதரிகளால் ஏற்பட்டிருந்த பிரச்சினை தீரும்.

**விருச்சிகம்:** சமீபத்தில் ஏற்பட்ட மனப்பக்குவத்தால் எதையும் சமாளிப்பீர்கள். எவரிடமும் கடன் வாங்காதீர்கள். நண்பர்கள் உங்களிடம் இரகசியத்தைப் பகிர்ந்துகொள்வர். வெற்றிப் பாதையை நோக்கிச் செல்வீர்கள்.

**தனுசு:** எதிர்பாராத பணவரவு உண்டாகும். பெண்களால் சிறு தொல்லை வரும். பெண்கள் தொடங்கும் முயற்சிகள் ஓரளவு வெற்றி தரும். நன்மை சிறிதளவு தள்ளிப்போனாலும் வெற்றியாக முடியும்.

**மகரம்:** குடும்பத்தில் முன்பு இழந்திருந்த நிம்மதி பிள்ளைகளால் கிடைக்கும். இதுவரை இருந்த பொருளாதார பிரச்சினைகள் குறையும். திட்டம் நிறைவேறும்.

**கும்பம்:** சமாளிக்கும்படியான சிறு செலவுகள் உண்டாகும். நீங்கள் மதிக்கும் மேலதிகாரிகளைச் சந்தித்து மகிழ்ச்சி அடைவீர்கள். மனச் சங்கடம் நீங்கும். முன்னேற்றம் அடைவீர்கள்.

**மீனம்:** அளவுக்கு அதிகமாக எவரிடமும் நெருங்கிப்பழகவேண்டாம். [illegible] இரண்டு நாள்களாக இருந்து வந்த குழப்பம் ஒன்று தீரும். புதிய நபரின் அறிமுகம் கிடைக்கும். மனஅமைதி கூடும்.





## மகளிர்...

மையத்தை யாழ்ப்பாணத்தில் விரைவில் அமைக்கவுள்ளோம் என்று இலங்கைக்கான இந்தியத் தூதரகத்தின் அரசியல் ஆலோசகர் திருமதி பானு பிரகாஷ் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி மகளிர் அணியின் ஏற்பாட்டில், மகளிர் தின நிகழ்வு பசுமைப்பூங்காவில் நேற்று இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஆண்கள் அரசியலை சமாளிக்ககூடியவர்களாகவும் ஊகிக்க கூடியவர்களாகவும் இருக்கின்றார்கள். பெண்களுக்கும் அரசியலில் சம வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். ஆனால் இலங்கை நாடாளுமன்றத்தில் பெண் பிரதிநிதித்துவம் உரிய அளவில் இல்லை. பெண் என்பவள் அரசியலுக்குள் நுழைவதே மிகப்பெரும் சாதனையாக அல்லது வெற்றியாகப் பார்க்கப்படுகிறது. கட்சியில் பெண்கள் படிப்படியாக வளர்வது கடினமாகவே காணப்படுகின்றது. இவ்வாறாக பெண்களுக்கு வாய்ப்பும் வழங்கி அவர்களுக்கு ஆதரவையும் வழங்குவது பெரும் சுமையாகவே பார்க்கப்படுகின்றது.

இவ்வாறாக பின் தள்ளப்படுகின்ற பெண்களு ்காக இந்தியத் தூதரகம் பல அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டுள்ளது. வடகிழக்கில் பெண் தலைமைத்துவக் குடும்பங்களை அடிப்படையாகக் கொண்டு வீடுகளை அமைத்துக்கொடுத்தது. பெண்கள் பாதுகாப்பு மற்றும் வலுவூட்டலுக்கான திட்டங்களையும் நடைமுறைப்படுத்தி வருகின்றோம்.

இந்திய நிதி உதவியுடன் கலாசார மத்திய நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. மாகாணத்திலுள்ள கலைஞர்களுக்கு உலகளாவிய ரீதியில் உள்ள தொடர்புகளையும் அதன் ஊடாக ஏற்படுத்த முடியும் என்று நம்புகின்றோம் - என்றார்.

கிளிநொச்சி பொதுச்சந்தை வளாகத்திலிருந்து மேள, தாள நாதஸ்வர வாத்தியங்கள் முழங்க ஊர்வலமாக விருந்தினர்கள் பசுமைப்பூங்காவுக்கு அழைத்துவரப்பட்டதைத் தொடர்ந்தே நிகழ்வுகள் ஆரம்பமாகின.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தலைவர் மாவை.சேனாதிராசா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், பொதுச்செயலாளர் ப.சத்தியலிங்கம், அரசியல் ஆய்வாளர் நிலாந்தன், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், த.குருகுலராஜா. சு.பசுபதிப்பிள்ளை ஆகியோருடன் உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள், உறுப்பினர்கள், தமிழ் அரசுக்கட்சியின் கிளிநொச்சி மாவட்ட மகளிர் அணியினர், உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

(அ-ஒ-125)

## விடுவித்த...

எழுத்துமூல உத்தரவாதம் வழங்கப்பட்ட 12 ஏக்கர் காணிகளை, கீரிமலை ஜனாதிபதி மாளிகைக்கு சுவீகரிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. எனவே இந்த நடவடிக்கையால் பாதிக்கப்படும் காணிகளின் உரிமையாளர்களை, கொல்லன்கலட்டியிலுள்ள வலி.வடக்கு பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் இன்று முற்பகல் 10 மணிக்கு ஒன்றுகூடுமாறு தவிசாளர் சோ.சுகிர்தன் அழைப்பு விடுத்துள்ளார்.

2019ஆம் ஆண்டு ஜுலை மாதம் 4ஆம் திகதி அப்போதைய வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் தலைமையில், கீரிமலையில் கடற்படையின் கட்டுப்பாட்டில் உள்ள காணிகள் அவற்றின் உரிமையாளர்களால் அடையாளம் காட்டப்பட்டிருந்தன. கீரிமலையில் அமைந்துள்ள ஜனாதிபதி மாளிகைக்கு வெளிப்புறமாக அமைந்துள்ள 12 ஏக்கர் விஸ்தீரண மான இந்தக் காணிகளை விடுவிக்க ஆளுநராக இருந்த சுரேன் ராகவன் எழுத்துமூலம் உத்தரவாதம் வழங்கியிருந்தார்.

இந்தநிலையில் நில அளவைத் திணைக்களத்தால் மேற்படி காணி உரிமையாளர்களுக்கு கடந்தமாதம் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அந்தக் கடிதத்தில், 04.07.2019 அன்று எல்லைகள் அடையாளம் காட்டப்பட்டு கீரிமலை சுற்றுலா விடுதியை (ஜனாதிபதி மாளிகை) அபிவிருத்தி செய்வதற்கு சுவீகரிப்பதற்காக அளந்து வரையப்பட்ட வரைபடத்துக்கு அமைவாக காணி சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-5)

## கந்தபூராணப் படிப்பு

வட்டுக்கோட்டை, மார்ச்8

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணகாம்பிகாசமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயத்தின் (கண்ணகியம்மன் ஆலயம்) இன்று செவ்வாய்க்கிழமை காலை 7மணி பூஜையைத் தொடர்ந்து கந்தபூராணப் படிப்பு இடம்பெறுமென ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர்.

**தேவை**

நெல், கொப்பறா, தானிய வகை கொள்வனவு செய்யப்படும்.
சாரதிகள் தேவை. 077 772 2215

**வேலையாட்கள் தேவை**

யாழ்ப்பாணம் உஷன் பகுதியில் அமைந்துள்ள பண்ணை ஒன்றிற்கு **பண்ணை முகாமையாளர் மற்றும் கூலியாட்கள் தேவை.**

077 592 5371, 076 316 5730

**தேவை**

யாழ்ப்பாணம் கொக்குவிலில் அமைந்துள்ள எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு **மேசன், கூலியாட்கள், பெயின்டர் (Painter)**, சாரதி **(Driver)** மற்றும் **தொழில்நுட்ப உத்தியோகத்தர்(T.O)** தேவை.

077 592 5371, 076 316 5730
E.mail:- jenoshanark@gmail.com

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 17.03.1934 மறைவு 07.03.2022

யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் **திரு.கி.சந்திரசேகரன்** அவர்களின் அன்புத் தந்தையார்

**அந்தோனி கிறகோரி**

அவர்களின் பிரிவினால் ஆழ்ந்த துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலக உத்தியோகத்தர் நலன்புரிக்கூட்டுறவுச் சங்கம்

**Immediate Vacancy**

Northern Central Hospitals (Pvt) Ltd is looking for a potential candidate to fill the position of

**IT Technician**

**Responsibilities:**

» Installing and configuring Computer hardware and Network
» Trouble shooting various issues related informatic technology
» Conducting Preventive Maintenance and repairing of IT equipment
» Handling requests, issues & queries related to IT
»Perform any other duties as assigned

**Qualifications:**

» Diploma in Computer hardware and networking
» Knowledge of installing and configuring computer hardware and preventing maintenance
» Knowledge in Network and Network Trouble shooting
» Positive attitude and great team work
» Previous working experience in similar field would be an advantage

Forward your resume with a cover letter to northernhrm@gmail.com within 7 days from this advertisement.


**HR Department**
**Northern Central Hospital**
**342, Palaly Road, Jaffna, 0217 217 324**

(CR 37604) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 25 . 10 . 1919



மறைவு 17 . 02 . 2002

## சின்னையா செல்லையா

(ஓய்வுபெற்ற சிரேஷ்ட வீதி பரிசோதகர், இலங்கை போக்குவரத்து சபை, முன்னாள் தலைவர், கமநல சேவைகள் நிலையம் – சாவகச்சேரி)

திதி – மாசிமாத பூர்வபக்க சஷ்டி

*இன்று போல ஒருநாளில்*
*உங்களைப் பிரிந்தோம் பின்பு*
*வளர்கிறோம்*
*வாழ்கிறோம்*
*வணங்குகிறோம்*
*வாழ்த்துங்கள்*
*வழிகாட்டியாய் வழித்துணையாய் வழிநடத்தி*
*என்றும் எங்களோடு இருங்கள்*

(CS 18672) (3/6)

மந்துவில்
கொடிகாமம்

021 223 0045

அன்புடன்
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

தோற்றம் 19 - 06 - 1944



மறைவு 07 - 03 - 2022

## திருமதி வரலட்சுமி பத்மநாதன்

(ஓய்வுபெற்ற ஆசிரியர் – தெல்லிப்பழை யூனியன் கல்லூரி)

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வரலட்சுமி பத்மநாதன் (ஓய்வுபெற்ற ஆசிரியர், குரும்பசிட்டி பொன்பரமானந்தர் வித்தியாலயம் மற்றும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி) அவர்கள் நேற்று (07.03.2022) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் குரும்பசிட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற இரத்தினம், அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், பத்மநாதனின் அன்பு மனைவியும், வடலியடைப்பைச் சேர்ந்த காலஞ்சென்ற ஆலாலசுந்தரம், தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், ராஜீவ் (அவுஸ்ரேலியா), அர்ச்சனா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், அஜந்தீபன் (கனடா), வாசுகி (அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்பு மாமியாரும், அரோஷிகா, ஆகாஷ், விருசாலி, விருஸ்தி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், வரதராசா (ஜேர்மனி), சிறீகாந்தமூர்த்தி (ஜேர்மனி), கமலாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.03.2022) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக குப்பிளான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
பத்மநாதன் (கணவர்)

குரும்பசிட்டி
077 367 1062

(CS 18756) (3/6)

# மரண அறிவித்தல்



பிறப்பு 23.03.1934

இறப்பு 05.03.2022

## நாகம்மா தேவராசா

(ராசா ரீச்சர் ஓய்வுபெற்ற அதிபர், யா/ வேலணை ஆத்திசூடி வித்தியாசாலை)

வேலணை வடக்கு சோளாவத்தையைப் பிறப்பிடமாகவும் யாழ். திருநெல்வேலியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி நாகம்மா தேவராசா அவர்கள் கடந்த (05.03.2022) இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மருதையினார் சின்னாச்சி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா, மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தேவராசா அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கேதீஸ்வரன், தேவராணி, அகிலராணி, இராஜேஸ்வரன், மகேஸ்வரன் ஆகியோரின் அருமைத் தாயாரும், மகாதேவி, திருச்செல்வம், ரகுமார், வசந்தி, ஸ்ரீகௌரி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற கண்ணம்மாவின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான பொன்னையா சிவப்பிரகாசம், பராசக்தி, பாக்கிய லட்சுமி, நகுலேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும், சித்திரன், ஜெயந்தன், தயானந், சிந்தூரி, கவிந்தன், சிந்துஜன், சுவஸ்த்திகா, சிவதீபன், அபிசன், இரஜிந்தன், கவினன், ராகுல், வருண் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அஜிந்தின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் நாளை (09.03.2022) புதன்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூத வுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண் பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

315/5, பலாலி வீதி,
பரமேஸ்வராச் சந்தி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
மக்கள், மருமக்கள்
அகிலராணி (மகள்)
021 221 2559

(CS18760) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி விற்பனைக்கும் வாடகைக்கும்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திற்கு அருகாமையில் உள்ள மருத்துவ கல்லூரிக்கு அருகில் உள்ள பொற்பதி வீதியில் மாடி வீடொன்று வாடகைக்கு விடப்படும். அதில் கீழே ஏழு அறைகளும் மேலே இரண்டு அறைகளும் மொத்தமாக ஐந்து குளியலறைகளும் உண்டு.

**குறிப்பு:-** கம்பனிகளுக்கும், மகளிர்களுக்கும் முதலிடம் வழங்கப்படும். (இவற்றை பிரிவுகளாகவும் வாங்கலாம்)

நுணாவில் சந்திக்கு அருகாமையில் 100m தூரத்தில் ஒரு பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.

சாவகச்சேரி கமலாசினி பாடசாலைக்கு அருகாமையில் பத்து பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.
**குறிப்பு:-** இவற்றை பிரிவுகளாகவும் வாங்கலாம்.

நுணாவில் சரஸ்வதி பாடசாலைக்கு அருகாமையில் மூன்று பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. (பருத்தித்துறை வீதி)

வெளிநாட்டில் இருந்து குழுவாக வருபவர்களுக்கு வீடு வாடகைக்கு கொடுக்கப்படும்.

நுணாவில் A-9 வீதியில் 200m தூரத்தில் 6 1/2 பரப்புக்காணி புதுவீடுடன் விற்பனைக்கு உண்டு.

ஊரெழு மேற்கு சுன்னாகம் பலாலி வீதியில் இருந்து 300m தூரத்தில் 4 1/2 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.

100 பேருடன் பார்ட்டி (Party) செய்யக்கூடிய பெரிய வீடு வாடகைக்கு விடப்படும். தேவையான வசதிகள் ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

## தொடர்புக்கு
**074 239 5790**
**075 792 1128**

(CS 18762) (4/6)

# நீங்கா நினைவஞ்சலிகள் ...

2ஆம் ஆண்டு | 19ஆம் ஆண்டு




தோற்றம் 25.09.1932 — மறைவு 19.02.2020

தோற்றம் 03.09.1929 — மறைவு 22.02.2003

யாழ். புத்தூர் வாதரவத்தையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவர்களான

**அமரர் சரவணமுத்து கனகசிங்கம்** | **அமரர் கனகசிங்கம் இராசம்மா**

கண்ணிமைத்து விழிக்கவில்லை
இரண்டு ஆண்டுகள் சென்று விட்டது அப்பா!
அத்துடன் பத்தொன்பது ஆண்டுகளும்
ஓடி மறைந்தது அம்மா!
ஒரு நொடிப் பொழுதும் அழியவில்லை
உங்கள் அன்பான உள்ளம் எம்மை
விட்டு.....

வாதரவத்தை புத்தூர்.

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் பூட்டப்பிள்ளைகள்

(CS43382) (3/6)

# வேலை வாய்ப்பு

வடமாகாணத்தில் கட்டுமானதுறையில் ஈடுபடும் எமது நிறுவனத்திற்கு பின்வரும் வெற்றிடங்கள் உள்ளன. ஆர்வமுள்ளவர்கள் உடனடியாக தொடர்பு கொள்ளவும்.

1. தொழில்நுட்ப உத்தியோகத்தர் (Civil) (HND, NCT - Or Equivalent with Experience)
2. மாபிள் வேலை. மேசன் வேலை செய்பவர்.

**077 712 0945, 076 316 5738**
**Email : vacancynsc@gmail.com**

(IN 18765)(3/6)

# தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம்
## விசேட பொதுக்கூட்டம்


எதிர்வரும் (13.03.2022 ) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு விசேட பொதுக்கூட்டம் சங்கப் பணிமனையில் இடம்பெறவிருப்பதால் அனைத்து அங்கத்தவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு மிகவும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

செயலாளர்
தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம்

(CS 18709) (3/6)

# இரண்டாம் ஆண்டு நினைவு நாள்

மலர்வு 15 . 10 . 1947 — உதிர்வு 01 . 03 . 2020



## அமரர் சின்னப்பு இராசகுலேந்திரன்
(குலம்)

**திதி: வளர்பிறை ஷஷ்டி [08.03.2022]**

ஆண்டுகள் இரண்டு சென்றாலும்
மனக் கவலை ஆறவில்லை - அப்பா
தாங்கள் செதுக்கிய பாதையில்
பயணிக்கின்றோம் வலிகளைச் சுமந்து
உங்களின் காந்தக்குரலும் இனிமைப் பேச்சும்
குழந்தைச் சிரிப்பும் என்றுமே ஒலிக்கும்
எங்கள் உயிர் மூச்சில்


ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

குடும்பத்தினர்
"குல மஹால்"
வீரபத்திரகோவிலடி, குப்பிழான் வடக்கு, குப்பிழான்.

(CS 43436) (3/6)

# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 23 . 04 . 1948 — மறைவு 03 . 03 . 2017



## அமரர் வேலுப்பிள்ளை பேரம்பலம்

**திதி: ஷஷ்டி [08.03.2022]**

ஐந்தாண்டு நகர்ந்தாலும்
நம்மை விட்டு அகலாது உங்கள் நினைவு
நினைவுகள் வருகையில்
நிலைகுலைந்து போகின்றோம் அப்பா!
உங்களை நினைக்காத நொடிகளில்லை
அன்பினாலும், பண்பினாலும் எங்கள் அனைவரது
உள்ளங்களில் குடியிருக்கும்
எங்கள் அப்பாவை நாம் என்றென்றும் நினைதிருப்போம்

அப்பாவின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்
மீசாலை வடக்கு, வேம்பிராய்

(IN 16948) (3/6)

## தெற்காசியாவின்...

மட்டுமல்லாது , தெற்காசியாவிலேயே மிகப்பெரிய சிமெந்துத் தொழிற்சாலையான 'லங்வா சங்ஸ்தா சிமெண்ட் கோப்பரேஷன் (பிரைவேட்) லிமிடெட்' நிறுவனத்தின் உற்பத்தி நடவடிக்கைகள் நேற்று முற்பகல் ஜனாதிபதி கோத்தாபய மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையில் ஆரம்பிக்கப்பட் டது.

63 ஏக்கர் பரப்பளவில், நவீன வசதிகளைக்கொண்டதாக அமைக்கப்பட்ட இந்த சிமெந்துத் தொழிற்சாலையின் வருடாந்த உற்பத்திக் கொள்ளளவு 4 மில்லியன் மெற்றிக் தொன் எனவும், முதற்கட்டமாக 2.8 மில்லியன் மெற்றிக்தொன் சிமெந்தை உள்நாட்டுச் சந்தைக்கு வழங்கும் எனவும் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

சர்வதேசப் போக்குகளுக்கு ஏற்ப தொழிலாளர்களுக்குப் பதிலாக தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பொருள்களைக் கையாளும் வகையில் தொழிற்சாலை அமைக்கப்பட்டுள்ளது. லங்வா சங்ஸ்தா சிமெந்து தொழிற்சாலையானது சாதாரண போர்ட்லேண்ட், போர்ட்லேண்ட் கொம்பசிட் மற்றும் பிலென்டட் ஹைட்ராலிக்ஸ் உள்ளிட்ட அனைத்து வகையான சிமெந்துகளையும் தயாரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், ஜனாதிபதி மற்றும் பிரதமர் புதிதாக நிர்மாணிப்பதற்கு உத்தேசித்துள்ள உருக்குத் தொழிற்சாலைக்கான அடிக்கல்லையும் நேற்று அங்கு நட்டு வைத்தனர். 250 ஏக்கர் நிலப்பரப்பில் நிர்மாணிக்கப்படும் புதிய உருக்கு ஆலைக்கான முதலீடு 400 மில்லியன் அமெரிக்க டொலர். இதன் உற்பத்திச் செயல்முறை 2024 இன் பிற்பகுதியில் ஆரம்பமாகும்.

(அ-ஒ-இ)

## பெரும்...

வில் மன்னார் பொது சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

நேற்று பி.ப. 1 மணியளவில் இறுதி அஞ்



சலி நிகழ்வு மன்னாரிலுள்ள அன்னாரது இல்லத்தில் இடம்பெற்றது.

இதன் போது மதத்தலைவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள், உப தவிசாளர்கள், உறுப்பினர்கள், திணைக்களத் தலைவர்கள், விளையாட்டுக்கழக வீரர்கள், தேசிய கால்பந்தாட்டஅணி பிரதிநிதிகள், இளைஞர் கழக அங்கத்தவர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், வர்த்தகர்கள், முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் என்று பல ஆயிரக்கணக்கானவர்கள் இறுதி அஞ்சலி செலுத்தினர்.

பி.ப. 2.45 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இருந்து பூதவுடல் மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து பூதவுடல் ஊர்வலமாக மன்னார் பொது சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு மாலை 5 மணியளவில் பல்லாயிரக்கணக்கான மக்களின் கண்ணீருடன் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இறுதி நல்லடக்கத்தையொட்டி மன்னார் பஜார் பகுதியில் உள்ள அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டு, துக்க நாள் கடைப்பிடிக்கப்பட்டது.

(அ-ஒ-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலைக்கு ஆள்கள் தேவை

- பெண் அலுவலக உதவியாளர் தேவை
- கல்வி தகைமை (O/L, A/L)
- அலுவலக வேலை பழக விரும்புவோரும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு
**077 592 5088, 077 528 4567**
**021 222 8680**

(CS 18714) (3/6)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி கிரியையும்



கடந்த 06.02.2022
ஞாயிற்றுக்கிழமை
சிவபத மடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர் நடராசா உதயச்சந்திரன்**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (08.03.2022) செவ்வாய்க் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடை பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

5 வீட்டுத்திட்டம்
நாவற்குழி.

குடும்பத்தினர்

"ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ"

## மரண அறிவித்தல்

தோற்றம் 10 - 05 - 1953



மறைவு 07 - 03 - 2022

### சண்முகலிங்கம் நாகேஸ்வரி

காரைநகர் வலந்தலை கணக்கணார் கண்டியைப் பிறப்பிடமாகவும் வேலணை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகலிங்கம் நாகேஸ்வரி நேற்று (07.03.2022) திங்கட் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் (மணியம்) செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான விநாயகன் அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சண்முகலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், ஜெயலக்சுமி (கிளி), இராசமலர் (குஞ்சு) காலஞ்சென்ற அருணாச்சலம் மற்றும் உத்தமதேவி (தேவி), ராதா, காலஞ்சென்ற மோகனதாஸ் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சுபாசினி காலஞ்சென்ற சுதாகரன் மற்றும் தர்சினி, தனுசா, திவாகரன் ஆகியோரின் அன்புத்தாயும், ஜேசுதாஸ், நிதிலேகா காலஞ்சென்ற சுதநேசன் மற்றும் ஐங்கரன், சோபிகா ஆகியோரின் அன்பு மாமியும், அருள்வாணன், ஓவியன், குயிலிசை, அன்பினி, ரஸ்மிகா ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.03.2022) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக தாளையம்பதி வேலணை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிற்பனை வீதி,
வேலணை.

தகவல்:
குடும்பத்தினர்
077 720 6712 (திவா)

(CS 18763) (4/6)

## மரண அறிவித்தல்



### வினாசித்தம்பி குணசிங்கம் (அப்புலிங்கம்)

மீசாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வினாசித்தம்பி குணசிங்கம் நேற்று (07.03.2022) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற வினாசித்தம்பி ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், குணராசா, குணமதி (யா/மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம்), குணசேகர், குணறதி, குணேந்திரா (லண்டன்), குணகீதா (மாந்தை கிழக்கு பிரதேச செயலகம்), குணந்தா, காலஞ்சென்ற குணரூபன் ஆகியோரின் அன்புத் தந்தையும், திலகராணி, சிவநாதன், இந்திரவதனா, சிவபாலன், உதயகுமார் (லண்டன்), பிரதீபன், சீதாயினி (பளை/தரமக்கேணி அ.த.க. பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமனாரும், பகீரதன் (சவுதி), அர்ச்சனா, அச்சுதன் சர்ஜினி (இத்தாலி), நிரோஜ், மகிஷா (லண்டன்), கஜீபன், சிவகௌரிகா, அபிரா, தர்மிகா, சுபாஜனன், கருணிகா, சிவானுஜன், ஆதித்திகன், அபினன், ஆர்த்திகன் ஆகியோரின் அன்புப் பேரனும், சஸ்வினா, அக்சயன் (இத்தாலி) அஸனா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.03.2022) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை வடக்கு,
மீசாலை.

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம் 10 - 09 - 1949



மறைவு 07 - 03 - 2022

### ஸ்ரீமதி தில்லைநாதன்ஐயா சரஸ்வதிதேவி அம்மா

நாயன்மார்கட்டு வெயிலுகந்த பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் இல 14. பண்டாரநாயக்க மாவத்தை களுபோவில தெஹிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட ஸ்ரீமதி தில்லைநாதன்ஐயா சரஸ்வதிதேவி அம்மா அவர்கள் நேற்று (07.03.2022) திங்கட்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் வெயிலுகந்த விநாயகர் தேவஸ்தான ஆலய ஆதீனகர்த்தாவாகிய சோதிலிங்கம் ஐயா, சின்னம்மா அம்மா தம்பதிகளின் மூத்த மகளும், மணக்கும்பான் வெள்ளைப்புற்றடி வீரகத்தி விநாயகர் ஆலய ஆதீனகர்த்தாவாகிய சதாசிவம் ஐயா அன்னலட்சுமி அம்மா தம்பதியரின் மருமகளும், கலாபூஷணம் தில்லைநாதன் ஐயாவின் பாசமிகு மனைவியும், அமரர்களான இரஜீந்திரன் ஐயா, விமலேந்திரன் ஐயா மற்றும் சுரேந்திரன் அமரர் குலேந்திரன் மற்றும் இந்திரன் ஐயா ஆகியோரின் பாசமிகு தாயாரும், அழகேசக்குருக்கள், கேசவன் ஐயா ஆகியோரின் பெரியதாயாரும், புவனேஸ்வரி, அனுஷா, லில்லி, வினோதினி, கயல்விழி ஆகியோரின் அன்பு மாமியும், சுதர்சன், வத்சலா, திலக்சனா, சுகிர்தன், அமிர்தக்குருக்கள், சுஹர்ணா, டனீஸ், ஹாசினி, குரு, ஷாம், மதுசூதனன், சுபாங்கி, கௌசிகா, ஸஸ்நிதா, கோகிலன், மல்லிகார்ச்சனா ஆகியோரின் அன்புப்பேர்த்தியும், அஷ்வினின் அன்புப்பாட்டியும், அமரர்களான பாலசுந்தரக்குருக்கள், இராசலட்சுமி அம்மா ஆகியோரின் அன்புச்சகோதரியும், அமரர் செல்லம்மா மற்றும் லட்சுமிதேவி, அமரர் சண்முகநாதக்குருக்கள் மற்றும் கணநாதன் ஐயா, சற்குணதேவி ஆகியோரின் மைத்துனியும், அமரர்களான சண்முகானந்தன், செந்தில்நாதன், பாலாம்பிகை மற்றும் புவனேஸ்வரி ஆகியோரின் உடன்பிறவாச்சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.03.2022) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 38, அரசடிப்பிள்ளையார் வீதி,
நாயன்மார்கட்டு, நல்லூர்.
077 375 3634
077 889 0428

தகவல்:
குடும்பத்தினர்

(CS 18766) (4/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈஸ்டர் தாக்குதலின் பின்னே பெரும் அரசியல் சதித்திட்டம்

## ஐ.நா.வின் தலையீட்டைக் கோரி உரையாற்றுகையில் கர்தினால் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 8

ஈஸ்டர் தாக்குதலின் பின்னணியை வெளிக் கொண்டுவரவும் பாதிக்கப்பட்டோருக்கு நீதியை வழங்கவும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை தலையிட வேண்டும் என்று கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை கோரியுள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 49 ஆவது அமர்வில் பேசிய அவர், தற்கொலை குண்டுத் தாக்குதலில் 82 குழந்தைகள் உட்பட 269 பேர் கொல்லப்பட்டனர் என்றும் 14 நாடுகளைச் சேர்ந்த 47 வெளிநாட்டினர் உள்ளிட்ட 500 க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர் என்றும் கூறினார்.

இந்த தற்கொலைக் குண்டுத் தாக்குதல் இஸ்லாமிய தீவிரவாதிகளால் முன்னெடுக்கப்பட்ட போதும் இந்தப் படுகொலையின் பின்னணியில் பெரும் அரசியல் சதித்திட்டம் இருப்பது அடுத்தடுத்த விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில் பலமுறை தாம் கோரிக்கை விடுத்தும், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை வழங்குவதற்கு தற்போதைய இலங்கை அரசு தவறிவிட்டது என்று பேராயர் கூறினார்.

தாக்குதலின் பின்னணியில் உள்ள உண்மையை வெளிக்கொணர்வதற்கும், பொறுப்புக்கூறவேண்டியவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கு பதிலாக, நீதிக்காகக் குரல் கொடுப்பவர்களை அடக்கும் நடவடிக்கை இடம்பெறுவதாக அவர் குற்றஞ்சாட்டினார்.

ஆகவே சாட்சிய சேகரிப்பு நடவடிக்கையோடு தாக்குதலின் பின்னணியில் உள்ள உண்மையைக் கண்டறிய பக்கச்சார்பற்ற விசாரணையை உறுதி செய்வதற்கான வழிமுறைகளை வகுக்க வேண்டும் என பேரவையையும் அதன் உறுப்பு நாடுகளையும் அவர் கேட்டுக்கொண்டார்.

(அ-ஒ-இ)

### 'ஒற்றுமை...

அதன் பின்னர் அரசுடனும் சர்வதேசத்துடனும் பேசுவோம். நிலத்திலும், புலத்திலும், தமிழகத்திலும் உள்ள தமிழுறவுகள் இவ்வாறான ஒற்றுமைக்கு உறுதுணையாக இருக்கவேண்டும். ஒன்று சேர்ந்து ஒரு சமஷ்டி அரசமைப்பை இலங்கையில் உருவாக்கப் பாடுபடுவோம். இவ்வாறு வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில்,

இன்றைய காலகட்டத்தில் தமிழ்த் தேசியம் பேசும் அனைத்துக் கட்சிகளினதும் ஒற்றுமையானது அந்தந்தக் கட்சித் தலைவர்கள் அனைவரையும் சிறந்த தலைவர்களாகவே கணிக்க வைக்கும். அதை நாம் மறந்துவிடலாகாது.

இலங்கைத் தமிழர்கள் விடயத்தில் எமது முன்னோர்கள், நாம், பிரித்தானியா, இந்தியா, அமெரிக்கா மற்றும் ஏனைய நாடுகள் விட்ட தவறுகளைத் தொடர்ந்து பேசுவதில் பயனில்லை. ஐ.நா. சபை போன்ற சர்வதேச நிறுவனங்கள் மற்றும் அமைப்புக்கள் போன்றன விட்ட தவறுகளைப் பேசிப் பயனில்லை. இன்று, எமது அகிம்சைப் போராட்டங்களுக்குப் பின்னர், ஆயுதப் போராட்டங்களுக்குப் பின்னர் ஒரு ஆபத்தான கால கட்டத்தை எட்டியுள்ளோம்.

இன்று வெள்ளம் தலைக்கேறிவிட்டது. ஒற்றுமையின்றேல் அனைவர்க்குந் தாழ்வே என்ற கட்டத்தை நாம் அனைவரும் அடைந்துள்ளோம்.

இன்றைய தமிழ்த் தலைவர்கள் கருத்தொருமித்தலால் ஒன்று சேர்ந்து வடக்கு-கிழக்கு தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையைப் பெறவேண்டும். சர்வதேச நிலைமைகள் பூகோள அரசியல் சூழல் ஆகியன சாதகமாக வந்து கொண்டிருக்கும் இவ் வேளையில் நாம் எமது தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு இடமளியாமல் எமது மக்களின் வருங்காலம் பற்றிச் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும். தேர்தலின் போதான கட்சிகளின் சுயலாப நோக்கங்கள், கட்சித் தலைவர்களின் சுயநல ஏக்கங்கள் போன்றன தனிப்பட்ட விரோத மனப்பாங்குகள் பேதங்கள், 'ஈகோ' அல்லது அகந்தை நிறை சிந்தனைகள் ஆகியவற்றைத் தாண்டி நாம் ஒற்றுமை காப்பது அவசியம். தமிழரின் விடியலுக்காக திறந்த மனதுடன் கலந்துறவாடி ஒரு ஒற்றுமை ஒன்றியத்தை உருவாக்குவது அவசியம். அதன் பின்னர் அரசுடனும் சர்வதேசத்துடனும் பேசுவோம். நிலத்திலும், புலத்திலும், தமிழகத்திலும் உள்ள தமிழுறவுகள் இவ்வாறான ஒற்றுமைக்கு உறுதுணையாக இருக்கவேண்டும். ஒன்று சேர்ந்து ஒரு சமஷ்டி அரசமைப்பை இலங்கையில்உருவாக்கப்பாடுபடுவோம். அதன்பின் வரும் சமஷ்டி அரசை யார் வழி நடத்த வேண்டும் என்பதில் நாங்கள் கட்சிகள் ரீதியாக போட்டிகளில் ஈடுபடலாம். இன்றைய சூழலைப் புரிந்து கொண்டு காய் நகர்த்துவதே தமிழ்த் தேசியக் கட்சித் தலைவர்களின் இன்றைய தலையாய கடப்பாடாகும் - என்றுள்ளது. (அ-ஒ-5)

### நாங்கள்...

ராஜபக்சக்களின் இந்த அரசு மிகவும் மோசமானது. நாங்கள் பசியில் வாடுகின்றோம். எரிபொருளுக்கு நீண்ட வரிசையில் காத்திருக்கின்றோம். அவர்கள் ஹெலிகொப்டரில் சுற்றித்திரிகின்றனர் என்று தென்னிலங்கை சிங்கள மக்கள் ஆவேசமாகத் தெரிவித்துள்ளனர்.

குருநாகலில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையமொன்றுக்கு அருகில் பொது மக்கள் மிக நீண்ட வரிசையில் காத்திருந்த போது, அப்பகுதியில் ஹெலிகொப்டர் ஒன்று மிகத் தாழ்வாகப் பறந்துள்ளது. இந்தச் சம்பவத்துக்கு அங்கு கூடியிருந்த மக்கள் கடுமையான எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

பொது மக்களுக்கு 1,000 ரூபாவுக்கு மாத்திரமே எரிபொருள் வழங்கப்படுகின்றது. எனினும் வி.ஐ.பிக்களுக்கு லட்சகணக்கில் எரிபொருள் வழங்கப்படுவதாக மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

தாம் அதிகாலை 5 மணி முதல் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நிற்பதாகவும் மாலை வரையில் பசியுடன் நின்று எரிபொருள் பெற்றுச் செல்வதாகவும் தமது ஆதங்கத்தை வெளியிட்டுள்ளனர்.

(அ-ஒ-இ)

### கல்வித்தகைமை...

நாடாளுமன்ற அலுவலகம் கோரிக்கை விடுத்திருந்த போதிலும் 20 வீதமான உறுப்பினர்களின் கல்வித்தகைமை வழங்காதுள்ளதாக நாடாளுமன்ற அலுவலகம் தெரிவித்துள்ளது. (அ-ஒ-இ)

### நகை, பணம்...

14 பவுண் நகையும், 2 ஆயிரத்து 500 பவுண்ஸ் வெளிநாட்டு நாணயத்தாள்களும் திருடப்பட்டுள்ளதாக அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த வீட்டில் பூப்புனித நீராட்டு விழா நேற்றுமுன்தினம் பகல் நடைபெற்றது. அன்றைய தினம் இரவு வீட்டார் நித்திரையில் இருந்தபோது, பின்பக்க ஜன்னல் கம்பிகளை வளைத்து உள்ளே நுழைந்த திருடர்கள் 12 பவுண் தாலி, 2 பவுண் சங்கிலி மற்றும் வெளிநாட்டு நாணயத்தாள்களை திருடிச் சென்றுள்ளனர்.

(அ-ஒ-23)

### வீதி...

அணைக்குமாறு நிதியமைச்சர் பஸில் ராஜபக்ச கோரியுள்ளார். அனைத்து உள்ளூராட்சி தலைவர்களும் மின்சாரத்தை சேமிக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

(அ-ஒ-இ)

### நாணயமாற்று...

201 ரூபாவாக இருந்து வருகின்றது. இந்த நிலையில் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையின் கடந்த 4ஆம் திகதி முன்வைத்த யோசனைக்கு அமைவாக, நாணயமாற்று வீதத்தில் நெகிழ்ச்சி தன்மையை கடைப்பிடிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன்படி அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதியை 230 ரூபாவை மிஞ்சாத வகையில் பேணுவதற்கு மத்திய வங்கி அறிவித்துள்ளது. (ஒ-இ)

### சோமாலியாவை...

மருந்துகளை இறக்குமதி செய்யும் திட்டம் இல்லை என்றால், பிரச்சினையை மறைக்காமல், பொதுமக்களின் பாதுகாப்புக்காக மருந்துகளுக்கான மனிதாபிமான உதவியைப் பெற விண்ணப்பம் செய்ய வேண்டும் என சுகாதார நிபுணர்கள் கூட்டமைப்பின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்தார்.

'தனியார் மருந்தகங்களுக்கு மருந்துகளை வழங்கும் 60 வீதமான களஞ்சியசாலைகள் ஏற்கனவே மூடப்பட்டுவிட்டன. மீதமுள்ளவை 4 முதல் 6 வாரங்களில் மூடப்படும்' என்றும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் அண்மைக்கால வரலாற்றில் இலங்கையில் இப்போது ஏற்பட்டுள்ள மிகப்பெரிய நெருக்கடிகள் எத்தியோப்பியா, சோமாலியா போன்றவற்றில் கூட ஏற்படவில்லை - என்றார். (அ-ஒ-இ)

### விமலின்...

மேற்கொண்டிருந்த தினம், வீதியை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுத் தொடர்பில் முன்னாள் அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ உள்ளிட்ட 6 சந்தேகநபர்களுக்கு எதிரான வழக்கை எதிர்வரும் மே மாதம் 30 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. கொழும்பு மேலதிக நீதிவான் சந்திம லியனகே இதற்கான உத்தரவை நேற்று பிறப்பித்துள்ளார்.

2016 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 6 ஆம் திகதி, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் அல் ஹுசைனின் இலங்கை பயணத்தின்போது வீதியை மறித்து பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படும் வகையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாக சந்தேகநபர்கள் மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அரசின் அமைச்சர் பொறுப்பிலிருந்து சில தினங்களுக்கு முன்பே, விமல் வீரவன்ஸ பதவி நீக்கப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-இ)

### பெரமுன....

கொழும்பு புறக்கோட்டையில் அமைந்துள்ள ஐக்கிய மக்கள் சக்தி தலைமையகத்தின் மீது முட்டைகளை கொண்டு நேற்று தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

கடந்த அரசு மக்களுக்கு என்ன செய்தது என கேள்வி எழுப்பி, பொதுஜன பெரமுன நாடாளுமன்ற உறுப்பினருடன் வருகை தந்த சிலர் முதலில் போராட்டத்தை ஆரம்பித்தனர். பின்னர் அவர்கள் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமை அலுவலகம் மீது முட்டைகளால் தாக்குதல் நடத்தியதுடன், அலுவலகத்தின் முன்பாக நிறுத்தப்பட்டிருந்த கார்கள் மீது சுவரொட்டிகளையும் ஒட்டியுள்ளனர்.

சில தினங்களுக்கு முன்னர் ஐக்கிய மக்கள் சக்தியின் மகளிர் அணி செயற்பாட்டாளரான நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர, ஜனாதிபதியின் மிரிஹான வீட்டைச் சுற்றி வளைத்துப் போராட்டம் நடத்தியிருந்தார். மறுநாள், ஹிருணிகா வீட்டுக்கு முன்பாக சிலர் போராட்டம் நடத்தியிருந்தனர். இவ்வாறானதொரு நிலையிலேயே இந்தத் தாக்குதல் நடைபெற்றுள்ளது.

இந்தத் தாக்குதல் தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலர் ரஞ்சித் மத்துமபண்டார வெளியிட்டுள்ள அறிக்கையில், இதுபோன்ற கோழைத்தனமான செயல்களால் ஐக்கிய மக்கள் சக்தியின் மக்கள் சார்ந்த வேலைத்திட்டங்களை நிறுத்த முடியாது என்பதை குண்டர்கள் குழுக்களுக்கு கூறிக்கொள்கிறோம். இன்று மக்களை வாட்டி வதைக்கும் பிரச்சினைகளுக்கு அரசிடம் பதில் இல்லை என்பதையே இவ்வாறான சம்பவங்களில் இருந்து தெளிவாகின்றது என்று குறிப்பிட்டுள்ளார். (ஒ-44)

### விஸ்வரூபமெடுக்கும்...

நாட்டில் கடந்த சில வாரங்களாக நிலவும் எரிபொருள் தட்டுப்பாடுகளுடன் தற்போது மீண்டும் எரிவாயுவுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. டொலர் நெருக்கடியின் காரணமாக சமையல் எரிவாயுவை இறக்குமதி செய்வதற்கான கடன் கடிதங்களை விடுவித்துக் கொள்ள முடியாமையால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக பேக்கரி, சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் ஹோட்டல்கள் உள்ளிட்ட உணவகங்கள் மூடப்பட்டுள்ளதாகவும் துறைசார் சங்கங்கள் குறிப்பிட்டுள்ளன. (அ-ஒ-இ)

### உச்சத்தைத்...

விலை 14 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு உச்சத்தை எட்டியுள்ளது. பீப்பாய் ஒன்று 130 அமெரிக்க டொலர் வரை உயர்ந்துள்ளது.

(அ-ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எசல பெரஹறவில்

# புனித தந்ததாதுவை சுமந்த யானை இறப்பு!

கொழும்பு,மார்ச் 8

கண்டி, எசல பெரஹறவில் அதிக தடவைகள் புனித தந்ததாதுவை சுமந்துசென்ற நெதுன்கமுவராஜா என்ற யானை 69 வயதில் நேற்று உயிரிழந்துள்ளது.

இந்தியாவின் மணிப்பூரில் 1953ஆம் ஆண்டு பிறந்த நெதுன்கமுவராஜா, 10 அடி உயரம் கொண்டது.

2007ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை யில், இந்த யானை கண்டி எசல பெரஹறவில் அதிக தடவைகள் புனித தந்ததாதுவை சுமந்து சென்றுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4-இ)

## தவக்காலச் சிந்தனை

### பொதுநலமே இறைவிருப்பம்

''பிறர் உங்களுக்குச் செய்யவேண்டுமென்று விரும்புகிறவற்றை எல்லாம் நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள். அப்போது கேட்பவை கொடுக்கப்படும். தேடுபவற்றை கண்டடைவீர்கள். தட்டுவோருக்குத் திறக்கப்படும்" என்கிறார் ஆண்டவர்.

இப்பொன்விதியை நம்வாழ்வில் கடைப்பிடிக்கவேண்டுமெனில் எமது கண்ணோட்டங்கள் மாறவேண்டும்.

சுயநலம் தவிர்த்து பொதுநல செயற் பாடுகளில் இறங்கவேண்டும். என்னுடைய வளர்ச்சியும், உயர்ச்சியும், மகிழ்ச்சியும் அடுத்தவரின் உயர் விலும், மகிழ்விலும் தங்கியுள்ளது என்ற எண்ணம் பெருகவேண்டும். மனிதஉறவுகள் வளர்வதற்கு அடிப்படை இந்தப்பொன்விதி, அப்போது மனிதம் தழைக்கும். மனிதம் உயிர்பெற்றால் இறையாட்சி மண்ணில் மலரும்.

வாழ்க்கை வானில் பொதுநலச் சிறகு தரித்து அனைத்து உயிர்களின் இன்ப, துன்பங்களைத் தன் சொந்த நிலையாக ஏற்கும் இதயம் வந்துவிட்டால் அன்றே உலகம் அமைதி நிலவும் ஆலயமாக மாறும்.

எஸ்.யேசுதாஸ்,
கொழும்புத்துறை.


**சாரதி தேவை**

யாழ் நகரில் இயங்கி வரும் வேணி களஞ்சியத்திற்கு சாரதி தேவை.
(A.D)
(CS 18769) (4/6)

165.கே.கே.எஸ்வீதி, யாழ்ப்பாணம். தொடர்புக்கு 077 908 2146

**காட்வெயர் பொருட்கள் விற்பனைக்கு**

காட்வெயர் பொருட்கள் மலிவு விலையில் உடனடியாக விற்பனைக்கு
தொடர்புகளுக்கு 076 641 6466
(CS 18758) (3/6)

**A/L - 2022 DAY CLASS**

கணக்கீடு : D.Sam
ஆரம்பமாகிவிட்டது
தினமும்
காலை 8.00 - 10.00
(CS 18764) (3/6)

**DMI**
[வெலிங்டன் சந்தி]
Commerce Unit
T.P : 077 848 0604

**துரித பொதிகள் சேவை**

உள்நாடு வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை
11 Kg மேற்பட்ட பொதிகளுக்கு விசேட சலுகை
India : 1500/=
Australia : 1850/=
France : 1400/=
Germany : 1250/=
மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்
திருமுருகன் கொம்நெற்
321, K.K.S. Road, யாழ்ப்பாணம்.
0777 554528
(CS 18776) (4/6)

**APPLY FOR STUDENT VISA – 2022**

1) Child education 5 – 17 years (both parent can go with children)
2) Student Visa with work
a. Canada & UK – IELTS (6 – 6.5)
b. Europe Countries (Germany, Swiss, Italy. France etc…) - No need to have an IELTS.
c. Australia family settled visa

Application now in process - Register now
Minimum qualifications – A/L or NVQ level 4 முடித்திருக்க வேண்டும்.
வேலையுடன் கூடிய கற்கை நெறியினை தொடர விரும்புபவர்கள் கீழ் உள்ள மின்னஞ்சல் முகவரிக்கு தங்களது சுயவிபரக்கோவையை அனுப்பவும். தகுதியானவர்களை தெரிவு செய்து தொடர்புகொள்ளப்படும்.
(CS 18777) (4/6)

For consultation: The Visa Consultant
Adiyapatham Road, Thirunelvely, Jaffna. - T.P: 0770385584 - Email Id: naltcjaffna@gmail.com

**குருக்கள் தேவை**

இருபாலை கட்டப்பிராய் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்திற்கு நிரந்தரமாகத் தங்கியிருந்து மூன்று காலப் பூசை செய்வதற்கு குருக்கள் குடும்பம் தேவை.
வீட்டு வசதி உண்டு
மகோற்ஷவம் நடைபெறும் ஆலயம்
நடைமுறைகள் சம்பளம் போன்றன நேரில் பேசிக் கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு 077 809 6181
தலைவர்
ஆலய பரிபாலன சபை
(CS 18714) (3/6)

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் நாவற்குழியில் 15 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் (நிலப்பரப்பு) A9 வீதியில் இருந்து 150M தூரம். லங்காஅசோக் லேடன் வாகனவிற்பனை நிலையத்திற்கு அருகாமையில். நாவற்குழி சந்தியிலிருந்து 500 M தூரம்.யாழ். பஸ் நிலையத்திலிருந்து 8 KM தூரம்
18 அடிப்பாதையுடன் இயற்கை சூழல், நன்னீர்ச்சூழல்
தொடர்பு : குரு - 077 6234 204, 077 2880 152, 076 6583 621, 077 9116 983

**10ஆம் ஆண்டு நினைவலைகள்**

**திருமதி இரத்தினராசா - பாரதி**





பாரதி பவனம் கண்டெடுத்த முத்தே – எமை
பத்துமாதம் சுமந்து பெற்ற சொத்தே
தசாப்தம் ஒன்று ஆனதம்மா இன்று – நாளும்
தவிக்கின்றோம் தாயே உனைப் பிரிந்து

அண்ணன் தம்பி பாசமுள்ள சோதரி ஆனாய்
அல்வாய் ஆலடியான் வாசல் நாடும் பக்தையுமானாய்
சொந்தம் சுற்றம் பேணுகின்ற அன்பினள் ஆனாய்
தொண்டு செய்வதிலே சேவகியும் ஆனாய்

மக்கள் எம்மை வளர்த்திடவே பாடுகள் பட்டாய்
மனம் நிறைந்த கல்வியுடன் மணவாழ்க்கையும் தந்தாய்
பேரன் பேர்த்தி கண்டு மனநிறைவு கொண்டாய்
தேடி வந்தோம் காணவில்லை எங்கு நீ சென்றாய்

தூரதேசம் வந்துன் அருகினில் இருந்தோம்
சொல்லாமல் போனதேனோ மனம் வருந்துகின்றோம்
ஈரவிழி நீர்சொரிய தேடுகின்றோம் அன்னையே
வானிருந்து தந்தையுடன் காத்திடுவாய் எம்மையே

(CS 18579) (3/6)

அப்பா, அம்மாவின் ஆத்மசாந்திக்காய் பிரார்த்திக்கும்
சுதர்சனா -சர்வேசன்(கனடா),
சங்கீதா-கந்ததாசன் (சுவிஸ்) } பிள்ளைகள்

பாரதி பவனம்,
கவிஞர் செல்லையா வீதி, அல்வாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.03.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.